Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 12 2024

செவ்வாய்க்கிழமை நவம்பர் 12, 2024 | ஒளி: 10 கதிர் 091 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




# வியாழன், வெள்ளி பூட்டு

பொதுத்தேர்தல் வாக்களிப்பு தினமான வியாழக்கிழமையும் (14) போயா தினமான மறுநாள் வெள்ளிக்கிழமை (15) சகல மதுபானசாலைகளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் சட்டத்தை மீறும் மதுபானசாலைகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கிடையில், நிலுவையில் உள்ள மதுபான உரிமங்களைப் புதுப்பிப்பதற்கு வருமான வரியைச் செலுத்தாத நிறுவனங்களுக்கு இம்மாதம் 30ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களில் 04 நிறுவனங்கள் தொடர்பில் மதுவரித்திணைக்களம் அதிக கவனம் செலுத்தியுள்ளதுடன் அந்த நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# "தமிழர்களிடம் இனப்பெருக்கம் இல்லை"

**பாறுக் ஷிஹான்**

தமிழர்களிடம் இனப்பெருக்கம் இல்லை, கல்வியும் இல்லை, பொருளாதாரம் இல்லை, சமூக கட்டமைப்பும் இல்லை. இவ்வாறு ஒன்றும் இல்லாமல் இந்த அரசியல் சாக்கடைக்குள் விழுந்து சேறு பூசுவதற்காகத் தான் எல்லோரும் வருகிறார்கள் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ.புஸ்பராசா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கி.லிங்கேஸ்வரனின் பிரச்சார அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, ஒருவர் சட்ட முதுமாணி என்று வருகின்றார்.

தொடர்ச்சி P2





# மௌன காலம் ஆரம்பமானது

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின் பிரசாரத்திற்கான மௌன காலம் திங்கட்கிழமை (11) நள்ளிரவு 12.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. அதன் பின்னர் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (11) நடைபெற்ற கடைசி அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் காணொளி காட்சிகள் மற்றும் விவரங்களை ஒளிபரப்புவது செவ்வாய்க்கிழமை (12) தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஒரு முக்கிய செய்தியில் மட்டுப்படுத்தப்பட வேண்டும் மற்றும் செய்தித்தாள் தலைப்புச் செய்திகளை வழங்கும்போது,செய்தித்தாளின் செய்தித் தலைப்பு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றும் வேறு எந்த விவரங்களோ அல்லது கருத்துகளோ உள்ளடக்கக்கூடாது என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்றைய பிரசாரக் கூட்டங்களின் அறிக்கைகளை செவ்வாய்க்கிழமை (12) நாளிதழ்கள் மற்றும் அவற்றின் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படலாம். இந்த நிபந்தனைகள் மற்ற அனைத்து சமூக வலைத்தளங்களுக்கும் பொருந்தும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் செய்தித்தாள் தலைப்புச் செய்திகளை வெளியிடும்போது, கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாரபட்சமான செய்திகளை வெளியிடக்கூடாது என்று அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் தேர்தல் ஆணையம் நிபந்தனைகளை விதித்துள்ளது.



# "கோட்டா, ரணிலின் வழியில் அனுரவும் பயணிக்கிறார்"

முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் பாதையிலேயே இந்நாள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் பயணிக்கின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தள்ளார்.

குழந்தைகள் மற்றும் தாய்மார்களைப் பாதிக்கும் வறுமைக்கு ஆளாகக்கூடிய ஒரு முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கு, 5 வயதுக்குட்பட்ட எடை குறைவான குழந்தைகள், இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் திரிபோஷாவைப் பெற்று வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# "பிரிந்து நின்றாலும் தமிழ்த் தேசியத்தை இழக்க முடியாது"



கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் மோதுண்டு பல அணிகளாகப் பிரிந்து நின்றாலும் தமிழ்த் தேசியம் எனும் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நாம் இழக்க முடியாது எனவே அனைவரும் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களியுங்கள் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# "பழைய அரசியலை கைவிட்டு புதிய அரசியலுக்கு வருவோம்"

**நிதர்ஷன் வினோத்**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏனையவர்களில் இருவர் வெல்வார்கள் என்றே வடக்கில் சொல்லப்பட்டது. ஊடகங்களும் அதைத் தான் சொன்னது. நாம் வெல்வோம் என்ற செய்தி வடக்கில் சரியாகச் செல்லவில்லை. தேர்தலுக்குப் பின்னர் எமது காரியாலயம் நிரம்பி வழியத் தொடங்கியது. இதன் பலன் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளனர் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண பிரதான தேர்தல் பிரசார கூட்டம் பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை(10) கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி,

பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்திற்காக தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணம் வந்தாரா? முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா யாழ்ப்பாணம் வந்தாரா?

நாம் வந்தோம். தேர்தலை வெற்றி கொள்ள மட்டும் எமக்கு யாழ்ப்பாணம் தேவை இல்லை.

தொடர்ச்சி P2

# "உறுதிப்படுத்தினால் அரசியலிருந்து விலகுவேன்"



மதுபானத்திற்கான அனுமதி கொடுத்தமையை உறுதிப்படுத்தினால் நான் பாராளுமன்றம் தெரிவு செய்த பின்பும் அரசியலிருந்து விலகுவேன். போலிப் பிரசாரத்திற்கு எதிராக மக்கள் விழிப்படைய வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள நிலையில் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் அது பலருக்குக் குடைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

தமிரசுக் கட்சி தலைவராக ஜனநாயக ரீதியில் போட்டியில் வெற்றி பெற்றிருந்தேன். தலைவராகத் தெரிவு செய்த என்னை எமது கட்சிக்குள் வழக்குப் போட்டுச் செயற்படாது தடுத்தனர். மக்கள் இது தொடர்பாகச் செய்தி சொல்ல முற்படுகின்றனர்.

தொடர்ச்சி P2



# பிரசாரக் கூட்டத்தில் அழுத ரோஹித

களுத்துறையில் ஞாயிற்றுக்கிழமை (10) பிற்பகல் நடைபெற்ற புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், உரையாற்றிக்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

மேலும், "கேஸ் சிலிண்டருக்கும், எனது விருப்பு இலக்கமான 11 ஆம் இலக்கத்திற்கும் வாக்களித்தாலும் ரோஹித அபேகுணவர்தன அமைச்சராக மாட்டார் என்பது இங்குள்ள மக்களுக்குத் தெரியும். நாங்கள் ஆட்சி அமைக்க மாட்டோம் என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

தொடர்ச்சி P2

# 10ஆம் இலக்கத்தால் பதுளையில் பதற்றம்




பதுளையில் முன்னாள் அமைச்சர் ஹரீன்பெர்ணாண்டோவின் தேர்தல் பிரசாரத்தினை பொலிஸார் தடுக்க முயன்றதைத் தொடர்ந்து பதற்ற நிலை ஏற்பட்டது.

சர்வதேச கால்பந்தாட்ட வீரர் லயனல் மெசியின் ஜேர்சியை போன்ற பத்தாம் இலக்க டீசேர்ட்டை அணிந்து ஹரீன்பெர்ணான்டோவும் அவரது ஆதரவாளர்களும் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# நீதிமன்றுக்கு வருகிறது சுஜீவவின் வாகனம்



முன்னாள் அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனத்தைக் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்குக் கொண்டு வந்து நீதிமன்றில் ஒப்படைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (11) உத்தரவிட்டுள்ளது.

சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# லொஹான் பிணை மனுத் தாக்கல்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள லொஹான் ரத்வத்த சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை எதிர்வரும் 19ஆம் திகதி பரிசீலிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனுவை பரிசீலித்த நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை திங்கட்கிழமை (11) பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "தமிழர்களிடம் இனப்பெருக்கம் இல்லை"

அடுத்தவர் தொழிலதிபர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் கோடிக்கணக்கான பணத்தினை செலவு செய்கின்றார். இதற்கு முன்னர் இருந்த காலத்தில் ஏன் அவரால் ஒரு வீட்டுத் திட்டத்தைக் கட்டிக் கொடுத்திருக்க முடியாது. அடிப்படை வசதி கூட இல்லாத பிரதேசங்கள் இருக்கின்றன. ஏன் அவற்றை அபிவிருத்தி செய்யவில்லை. தேர்தல் காலத்தில் தேர்தல் கட்டளைச் சட்டத்தை மீறி அவர் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் அவரது நடவடிக்கைகள் ஆழமாக ஊடுருவிக் கொண்டு வருகின்றது.

ஒரு தேர்தல் காலகட்டத்தில் தேர்தல் கட்டளைச் சட்டத்தை மீறி வீதிகளை நிர்மாணிக்கின்றார் என்று கூட எனது காரியாலயத் திறப்பு விழாவில் பகிரங்கமாகக் கூறியிருந்தேன். பின்னர் ஊடகத்தில் பெயரும் சொல்லி இடமும் சொல்லி பகிரங்கமாகச் செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தது. அதையும் தாண்டி அவர் இன்று ஐந்து கிலோ அரிசி சீனி உள்ளிட்ட பொருட்களை மக்களுக்கு வழங்கி வாக்கினைக் கேட்கின்றார்.

அம்பாறையில் இந்த நிமிஷம் வரைக்கும் தமிழர் ஒருவர் எம்.பியாகும் வாய்ப்பு இல்லை என்பதைப் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றேன். எனவே, இருக்கின்ற இரண்டு நாட்களை உச்சளவு பயன்படுத்துங்கள்.

ஜனாதிபதி தேர்தலில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றம் இம்முறை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுமா? என்பதை இந்த தேர்தல் தான் சொல்ல வேண்டும். கடந்த வருடம் தமிழரசுக் கட்சியும் அம்மானும் போட்டியிட்டு பிரதிநிதித்துவத்தை இழந்தார்கள். இம்முறை தமிழரசுக் கட்சி ஒற்றுமையைக் கேள்விக்குறியாக்கி தனியாகப் போட்டியிட்டு பிரதிநிதித்துவத்தை இழக்கப் போகின்றது என்றார்.

# "பிரிந்து நின்றாலும் தமிழ்த் தேசியத்தை இழக்க முடியாது"

இவ்விடயம் குறித்து அவர் திங்கட்கிழமை (11) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

மாற்றம் ஊழலற்ற புதிய அரசியல் கலாசாரத்தை கட்டமைப்போம் இலங்கையராக ஒன்றிணைவோம் என கவர்ச்சிகரமாகப் பன்மைத்துவ இலங்கை தேசியவாதம் பேசி முற்போக்கு இடதுசாரி சிந்தனை தத்துவ ஆட்சி கட்டமைப்பு என வெற்றுக் கோசத்தையும், போலி முக மூடியையும், அணிந்து கொண்டு ஜே வி பி தனது இனவாத கோர முகத்தைத் தேசிய மக்கள் சக்தி எனும் கவசத்திற்குள் திரையிட்டு மறைக்க முனைகிறது.

இலங்கையில் பௌத்த தேசியவாத இன வாதத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் விதைத்ததில் பெரும் பங்கு ஜே.வி.பிக்கு உண்டு. 2002ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கைக்கு எதிராக இனவாத கோஷத்தை முன் வைத்துக் குழப்பியதில் இன்றைய ஜனாதிபதிக்கும் பெரும் பங்கு உண்டு. அவர்கள் ஒன்றும் மீட்பர்கள் அல்ல பல மீட்பர்களை நாம் பார்த்து விட்டோம்.

ஒரு மாதத்திலேயே ஆட்சி கலகலத்துப் போய் விட்டது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய எந்த வாக்குறுதியையும் இதுவரை நிறைவேற்றவில்லை . தேர்தல் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகையாக வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிக்குரிய பெயர் விபரங்களை வெளியிடுவதாகக் கூறினார்கள். வெற்றி பெற்றதும் உடனடியாக இரத்து செய்ய உள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஒரு சிலருடைய பெயரை மட்டுமே வெளியிட்டவுடன் அமைதியாகிவிட்டனர். தூய வாதம் பேசியவர்கள் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் தெரிவில் இவர்களின் போலி ஊழல் ஒழிப்பு வாதம் என்பதற்கு இதுவே பெரும் சாட்சி எனவே தமிழர்கள் மத்தியில் படித்தவர்கள் என சொல்பவர்கள் தமது சுயநலத்திற்காக மாற்றம் எனும் கோஷத்தை முன்னிறுத்துகின்றன.

அவர்களால் தமிழினத்திற்கு எந்த மாற்றமும் நிகழ்ந்து விடாது. தேர்தல் வரலாற்றில் என்றும் இல்லாதது போல் எண்ணற்ற கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் களத்தில் உள்ளன. வெளிநாட்டுப் பண முகவர்களும் புலம்பெயர்ந்த தேசத்தவர்களும் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.

கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் மோதுண்டு பல அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தமிழ்த் தேசியம் எனும் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நாம் இழக்க முடியாது. இன்றைய தமிழ்த்தேசிய கட்சிகளும் அதில் உள்ள நபர்களும் சோரம் போகலாம். ஆனால் தமிழ்த் தேசியம் எனும் உயரிய இலக்கில் இருந்து நாம் ஒவ்வொரு சாதாரண குடி மகனும் உள்ளத்தால் கூட மாற்றிச் சிந்திக்க முடியாது. இன விடுதலை அரசியலுக்காக நாம் இழந்தவை அதிகம் இன்னும் இழப்பவை அதிகமாக இருந்தாலும் நாம் தமிழ்த் தேசியத்தைக் கடந்து கடுகளவும் நகர முடியாது. அது வரலாற்றுத் தவறாக மாறிவிடும் கடந்த காலத்தில் வினைத்திறனற்ற செயல்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நிராகரியுங்கள்.

பணத்திற்கு, பதவிக்கோ, சலுகைக்கோ, சமயத்திற்கோ, சாதியத்திற்கு,சாராயத்திற்கோ, அபிவிருத்திக்கோ வாக்களிக்க முயலாதீர்கள். நான் ஏன் எதற்கு உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்? எனும் கேள்வியை ஒவ்வொரு வாக்காளனும் மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களை யார் ஆள வேண்டும் எனும் உரிமையை அற்ப நபர்களுக்கு விற்று விடாதீர்கள். நாங்கள் நாங்களாகவே இருப்போம். எதற்காகவும் தமிழ்த்தேசியத்தை நிராகரிக்க முனையாதீர்கள். உங்கள் வாக்கு தடம் மாறாத இருப்பை தன தாக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகளுக்காக இருக்கட்டும்.

எமக்குள் உள்ள உள் பகையினை நாமே தீர்த்துக் கொள்ளலாம். எதிரிக்கு எந்த வாய்ப்பும் வழங்கி விடாதீர்கள் தேசம் பறி போய் விட்டது. தேசியத்தையாவது எம தாக்கிக் கொள்வதற்காகத் தேசிய உணர்வோடு வாக்களியுங்கள். அதுவே நாம் இந்த இனத்திற்கும் இந்த தேசத்துக்கும் செய்யும் பாரிய அர்ப்பணிப்பும் தியாகமும் ஆகும். என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "பழைய அரசியலை கைவிட்டு புதிய அரசியலுக்கு வருவோம்"

யுத்தம் இல்லாத நாட்டை உருவாக்கவும் இந்த நாட்டை கட்டியெழுப்பவும் யாழ்ப்பாணம் தேவை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 27,000 வாக்குகள் கிடைத்து. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது அது மிகவும் சிறியது. ஆனாலும் அது எமக்கு மிகப்பெரியது. எமது செய்தி தமிழ் மக்களிடம் செல்லவில்லை. தெற்கில் நாம் வேலை செய்தளவுக்கு வடக்கில் வேலை செய்யவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் உள்ள கட்சிகளின் தயவுடன் ஏனைய கட்சிகள் வடக்குக்கு வந்தது. அவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களையே ஒன்றிணைத்தார்கள். மக்களை ஒன்றிணைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியில் நாங்கள் வடக்கில் தலைவர்களுடன் பேசியதுடன், மக்களுடன் இணைந்து அரசியல் செய்கிறோம். தெற்கிற்கு எதிராக வடக்கிலும் வடக்கிற்கு எதிராக தெற்கிலும் செயற்பட்டு எவ்வாறு ஒற்றுமையைக் காட்டுவது. நாம் ஒரு அரசியல் கட்சியின் கீழ் ஒன்றிணையத் தயார் என்பதை இந்த கூட்டம் காட்டுகிறது.

நான் சொல்லும் விடயங்கள் உங்களுக்குத் தேவை இல்லையா? தேவை தானே! பழைய அரசியலைக் கைவிடுவோம். புதிய அரசியலுக்கு வருவோம். சிங்கள தமிழ் முஸ்லிம் பேதமின்றி பிரியாது சண்டை பிடிக்காது வாழ்வோம். அது தோல்வியடைந்த பழைய அரசியல். நவம்பர் 14ஆம் திகதி நாம் பங்களித்து சக்தி வாய்ந்த அரசாங்கத்தை முன்கொண்டு செல்வோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பலரும் வெளிநாட்டில் வியாபாரிகளாகக் கல்விமான்களாக ஆராய்ச்சியாளர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்ப நீங்கள் யோசிப்பீர்கள் தானே? உங்கள் அறிவை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வாருங்கள். உங்கள் நிதியை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வாருங்கள். இந்த நேரத்தில் கொண்டு வராத நிதி மற்றும் அறிவால் பலனில்லை. எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும் ஒரே எதிர்பார்ப்பு இருக்கிறது. அது இந்த நாட்டை கட்டியெழுப்புவது தான் என்றார்.

# "உறுதிப்படுத்தினால் அரசியலிருந்து விலகுவேன்"

நாங்கள் செல்லும் இடங்களிலும் சொல்கின்றனர். எமது கட்சிக்குள் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சேறு பூசும் முயற்சியில் இங்குள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருடன் சேர்ந்து இன்னொருவரும் சேர்ந்து எனக்கு எதிராகச் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய நிலையுள்ளது. மக்களுக்குச் சொல்லி வருகின்றேன் நான் கிளிநொச்சியிலிருந்து யாருக்காவது பார் அனுமதிப்பத்திரத்திற்குச் சிபார்சு செய்திருந்தால் அதனை உறுதிப்படுத்தினால் அரசியலிருந்து என்னை விலக்கி விடுங்கள்.

அதை எல்லாம் செய்ய முடியாதவர் ஏற்கனவே கிளிநொச்சியிலிருந்து பார் தொடர்பான விபரங்களை யாரோ ஒருவர் தேடி எடுத்திருக்கிறார். அதனை ஒருவர் என்னுடைய கடிதத் தலைப்பை பயன்படுத்தி போலியாக நான் அனுமதி கோரியதாகத் தெரிவித்துக் காட்டியிருக்கிறார்.

அதிலே சித்தார்த்தனுடைய பெயரும் குறிப்பிட்டிருக்கிறது. என்னுடைய கடித தலைப்பில் நான் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்து சித்தார்த்தனுடைய பெயர் எப்படி வரும் இதன் மூலம் மக்கள் விளங்கிக்கொள்வார்கள்.

பொலிஸ் நிலையத்தில் உரியவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

மக்களிடம் ஒன்றைச் சொல்கிறேன் மக்கள் என்னை நம்புங்கள் மதுபானத்திற்கான அனுமதி கொடுத்தமையை உறுதிப்படுத்தினால் நான் பாராளுமன்றம் தெரிவு செய்த பின்பும் அரசியலிருந்து விலகுவேன் என தெரிவித்தார்.

# 10ஆம் இலக்கத்தால் பதுளையில் பதற்றம்

எனினும், பொலிஸாரும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் இதுமறைமுக பிரச்சாரம் போல அமைவதாகத் தெரிவித்து அதனை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து, வாக்குவாதம் மூண்டது - அந்த ரீசேர்ட் தேர்தல் பிரச்சாரத்துடன் தொடர்புபட்டது இல்லை என ஹரீன்பெர்ணான்டோவும் அவரது ஆதரவாளர்களும் வாதிட்டனர்.

எனினும், இது முன்னாள் அமைச்சரின் தேர்தல் தேர்தல் போட்டிக்கான அடையாளக்குறிப்பாக காணப்படுவதாகவும்,ஏமாற்று அரசியல் பிரச்சாரம் எனவும் தேர்தல் ஆணையக அதிகாரிகளும் பொலிஸாரும் குறிப்பிட்டனர்.

# பிரசாரக் கூட்டத்தில் அழுத ரோஹித

அதையறிந்தும் இங்கு வந்து நன்றிக்கடன் செலுத்துகிறேன்.

எனக்கு வாக்களித்தீர்களா? என்று நான் மக்களிடம் கேட்க மாட்டேன். நான் தனிப்பட்ட முறையிலும் பார்க்க மாட்டேன்.

நான் மக்களுடன் இருந்தேன். மேலும் எதிர்க்கட்சி உறுப்பினராக உங்களுடன் தொடர்ந்து இருப்பேன்" என்றார்.

மேலும், மீனுக்குத் தண்ணீர் வேண்டும், இராணுவ வீரனுக்கு ஆயுதம் வேண்டும். அது போல, அரசியல்வாதிக்கு மக்கள் தேவை. அரசாங்கம் இல்லாவிட்டாலும் என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்புவீர்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். நான் விரக்தியடைந்து அரசியலை விட்டு விலக மாட்டேன்." என்றும் கண்ணீருடன் முன்னாள் அமைச்சர் கூறியுள்ளார்.

# "கோட்டா, ரணிலின் வழியில் அனுரவும் பயணிக்கிறார்"

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று 7 நாட்களுக்குள் திரிபோஷ நிறுவனத்தை மூடுவதற்கு அரச வர்த்தமானி மூலம் வேறு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நிறுவனத்தைக் கலைப்பதற்காக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இன்று அவர்கள் வேறு அறிவிப்புகளை வெளியிட்டு அதனை மூடமாட்டோம் என்கின்றனர். அவ்வாறு மூடாவிட்டால் வர்த்தமானியை மீளப் பெறுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு இரத்தினபுரி மாவட்ட மக்கள் சந்திப்பு திங்கட்கிழமை (11) ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ஹேஷா விதானகே தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் திரிபோஷ நிறுவனத்தைத் தனியார் மயமாக்க நடவடிக்கை எடுத்த போது, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் பெரும் குரல் எழுப்பி அதனைத் தடுத்து நிறுத்தியது. தற்போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் கோட்டாபய மற்றும் ரணில் ஆகியோரின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகிறார்.

ஜனாதிபதி வேட்பாளராக அனுரகுமார திசாநாயக்க மேடை மேடையாகக் கூறியவை தற்போது ஜனாதிபதியாக அனைத்தும் பொய்யாகி, தோல்வி கண்டுள்ளார் என்பதை அவரே நிரூபித்துள்ளார். வரி குறைக்கப்படும், விலை சூத்திரங்கள் இல்லாதொழிக்கப்படும், உகண்டாவில் பதுக்கி வைத்துள்ள பணம் கொண்டு வரப்படும் என்று மேடைகளில் கூச்சலிட்டாலும், இறுதியில் ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி. அரசாங்கம் சர்வதேச நாணயத்திடம் மண்டியிட்டு எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அடிமையாகியுள்ளது.

சாதாரண மக்கள் பயன்படுத்தும் எரிபொருட்களுக்கான விலையைக் குறைக்க வாய்ப்புள்ள நிலையில், அதைச் செய்யாமல் உயர் வர்க்கத்தினர் பயன்படுத்தும் எரிபொருளுக்கு மட்டும் இந்த வரியைக் குறைத்துள்ளனர்.

இவற்றைக் குறைப்பதற்கு பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அவசியமில்லை. நிறைவேற்று ஜனாதிபதியால் இதனை இலகுவாகச் செய்ய முடியும். கடவுச்சீட்டு வரிசை, தேங்காய் வரிசை, அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை வழங்க முடியாத இந்த அரசாங்கம் ஏனைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வை வழங்கப் போகிறது?

மின் கட்டணத்தை 66% குறைக்கலாம். ஆட்சிக்கு வந்தும் அவர் கூறியவாறு இதனைக் குறைக்கவில்லை. இவற்றைச் செய்வதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவையில்லை. அதிக ஊழல் காரணமாகவே மின் கட்டணம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்தார். ஆட்சிக்கு வந்து இன்று வரை அவரால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை. தேர்தல் காலப்பகுதிகளில் மக்களின் எதிர்பார்புகளை உச்சத்துக்கு கொண்டு வந்து, இன்று ஆட்சிக்கு வந்தும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது,
மக்கள் அபிலாஷைகள் நீர்மூலமாக்கியுள்ளார்.

4 வருடங்களில் கடனை செலுத்த வேண்டும். 2033ஆம் ஆண்டு முதல் கடனை திருப்பி செலுத்தும் காலத்தை முன்னாள் ஜனாதிபதி 2028 ஆகக் குறைத்தார். 2028க்குள் கடனை அடைக்கும் பொருளாதார சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லையெனில், 2028இல் மீண்டும் வங்குரோத்தடைவோம். எனவே புதிய ஒப்பந்தத்திற்குச் செல்ல வேண்டும். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடிப் பல புரிந்துணர்வுகளை எட்டியுள்ளதாகவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# லொஹான் பிணை மனுத் தாக்கல்

மிரிஹான பகுதியிலுள்ள வீடொன்றில் பதிவு செய்யப்படாத கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு லொஹான் ரத்வத்த விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



# பச்சை ஆடையினரால் சிரமம்

கொழும்பு காலி முகத்திடல் மைதானத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு பல்வேறு கட்டணங்களைத் தன்னிச்சையாக அறவிடுவதால் பச்சை நிற ஆடை அணிந்த குழுவொன்று மக்களை கடும் சிரமத்திற்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு பணம் வசூலிப்பது மிகவும் அநியாயம் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மிகக்குறைந்த நேரத்திற்கே வந்து ஓய்வெடுக்க வருபவர்களிடம் இவர்கள் பணம் வசூலிப்பதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். இந்நாட்டு மக்களிடம் பணம் வசூலிப்பதில் நியாயமான முறைமை பின்பற்றப்பட வேண்டுமென மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில், கொழும்பு மாநகர சபையின் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, அது தொடர்பில் ஆராய்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் பல இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்குக் குறிப்பிட்ட குழுக்கள் பணம் வசூலிப்பதாகக் கூறும் வாகன உரிமையாளர்கள், தமது அன்றாட நடவடிக்கைகளுக்காக வருபவர்களிடம் கட்டணம் வசூலிக்காமல், நகரில் இலவச வாகன தரிப்பிடங்களை ஒதுக்குவது மிகவும் அவசியம் என அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்றனர்.

# ‘சோழன்’ உலக சாதனை படைத்த மாணவர்கள்













மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்று வரும் மாணவர்களான ப்ராங்க் மிலன் லியோன், ரோஹித், யானுவர்ஷன் மற்றும் ஜோனதன் போன்றோர் கடந்த பல மாதங்களாக AI தொழில்நுட்பத்தின் பல்வேறு வாய்ப்புகளைப் பற்றித் தேடிக் கற்று, அதனடிப்படையில் அவர்கள் மேற்கொண்ட முயற்சி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அலுவலக ரீதியிலான நிகழ்வு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் வைத்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, நான்கு மாணவர்களும் இணைந்து நடுவர்கள் வழங்கிய போதைப்பொருள் அற்ற உலகம் என்ற தலைப்பில் கவிதை எழுதி, அதை AI தொழில்நுட்பத்தின் மூலம் பாடலாக மாற்றி, அதே இடத்தில் வெளியிட்டுள்ளனர்.

4 நிமிடங்கள் மற்றும் 23 நொடிகளில் மாணவர்கள் மேற்கொண்ட முயற்சியை உலக சாதனையாகச் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாக வாணி ராஜா, மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் த.இன்பராசா, மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுச்செயலாளர் சிவ வரதகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர் முகமது ஃபர்ஸான் போன்றோர் பதிவு செய்தனர்.

சோழன் நடுவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கு கொண்டவர்களும் இணைந்து சோழன் உலக சாதனை படைத்த நான்கு மாணவர்களுக்கும் சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் அடையாள அட்டை போன்றவற்றை வழங்கிப் பாராட்டியுள்ளனர்.

இந்த நிகழ்வை கதிரவன் இன்பராசா தலைமையேற்று நடத்திய அதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அறுவைச் சிகிச்சைத் துறையின் நிபுணர் மருத்துவர் ஜெயபாலன் ஜெயரூபன் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று சோழன் உலக சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்திச் சிறப்புரையாற்றியுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாகப் புனித மிக்கேல் கல்லூரியினுடைய தலைமை ஆசிரியர் ஏ.பி.ஜோசப், சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் கனேடிய நாட்டிற்கான தலைவரின் தாயார் பேரின்பம் பார்வதி மற்றும் பீப்பள் ஹெல்பிங் பீப்பள் பவுண்டேஷன் மோசஸ் ஜேசுதாசன் போன்றோர் பங்கு கொண்டு மாணவர்களை வாழ்த்திப் பாராட்டியுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாகப் பங்கு கொண்ட அருட்தந்தை போல் சற்குணநாயகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூத்த மருத்துவ விரிவுரையாளர் மருத்துவர் ஜி.ஆர்.பிரான்சிஸ், நச்சுயியல்துறை மருத்துவர் பிருந்தா கோமகராஜா போன்றோர் உலக சாதனை மாணவர்களைப் பாராட்டிப் பரிசளித்துள்ளனர்.

நிகழ்வை மென் பொறியியலாளர் டெரி ரொஜர் லியோன் ஒருங்கிணைத்து நடத்தியிருந்தார். பன்னாட்டுக் குழந்தைகள் அவசர நிவாரணத்தின் முன்னணி வழக்கு மேலாளர் மதனாவதி விஜயராஜா நிகழ்வைத் தொகுத்து வழங்கிய அதேவேளை, வாகரை செயலகப் பிரிவின் நிர்வாக அலுவலர் சிவரஞ்சன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மட்டக்களப்பு மெத்தடிஸ்ட் மத்திய கல்லூரியின் உளவியல் மற்றும் சமய ஆசிரியை சங்கீதா ராஜன் நன்றியுரை தெரிவித்துள்ளார்.

# “தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வோம்”



விருப்பு வாக்கு இன பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் இன உரிமை ஆகும். உண்மையில், நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் விருப்பு வாக்கு என்ற முறைமை அதை தான் வலியுறுத்துகிறது என தமிழ் முற்போக்குகூட்டணிதலைவர்மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

கொழும்பு-கொச்சிக்கடை, ஜம்பட்டா வீதியில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பாகத் தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி,கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளை தமிழ் வேட்பாளர்களுக்கு மாத்திரம் வழங்குவது அத்தியாவசியமாகும். இதுவே எமது பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ள உள்ள ஒரே வழி. இதை தான் விகிதாசார தேர்தல் முறையும் வலியுறுத்துகிறது.

தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய செயன்முறைமையை நான் எளிமையாக விவரிக்க விரும்புகிறேன். முதலில் நமது வாக்காளர்கள், தமது மாவட்டங்களில் போட்டிடும் தமிழ் வேட்பாளர்களில் வெற்றி பெறக்கூடிய அணி எது, அதன் சின்னம் எது என தீர்மானிக்க வேண்டும்.

அதன் பின்னர், அந்த அணிக்குள்ளே இருக்கும் தமிழ் வேட்பாளரின் அல்லது வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களைக் கண்டறிய வேண்டும். அதன் பின்னர், தேர்தலின் போது, வாக்குச் சீட்டில், தாம் தெரிவு செய்துள்ள சின்னத்துக்குப் புள்ளடி இட வேண்டும். பின்னர் தமிழ் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களுக்குப் புள்ளடி இட வேண்டும். அத்துடன், இந்த வாக்களிக்கும் கடமை முடிகிறது.

தமிழ் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளித்த பின்னர் விருப்பு வாக்குகள் மீதமாக இருக்குமானால், அந்த விருப்பு வாக்கை அந்த அணியின் தலைமை வேட்பாளருக்கு அளிக்கலாம். அளிக்காமலும் விடலாம். மூன்று விருப்பு வாக்குகளையும் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல.

தமிழர்கள் சிறுபான்மையாக வாழும் கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, பதுளை ஆகிய மாவட்டங்களில் இதுவே நமது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எம் முன் உள்ள ஒரே ஜனநாயக வழியாகும் என்றார்.

# தந்தையின் ஜீப்புக்கு பலியான மகன்

தந்தை செலுத்திய ஜீப் வண்டியில் மோதி, அவருடைய மகனான மூன்று வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானை - புகையிரத ஊழியர்களுக்கான வீட்டுத் தொகுதியைச் சேர்ந்த விஹங்க சத்சர என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தந்தை ரயில் திணைக்களத்தில் சாரதியாக பணிபுரிவதோடு, ஞாயிற்றுக்கிழமை(10) பிற்பகல் தந்தையின் ஜீப் வண்டியை வீட்டின் பின்பகுதிக்குச் செலுத்திய போது, பின்னால் வந்த சிறுவன் மீது ஜீப் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# லேக்ஹவுஸ் கட்டடத்தில் மோதிய கார்

கொழும்பு- லேக்ஹவுஸ் கட்டடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் காரொன்று விபத்துக்குள்ளானதில் சொத்துக்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள சீமெந்து சுவரில், திங்கட்கிழமை (11) காலையில் கார் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால், கார் விபத்துக்கு உள்ளாகி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

காரின் சாரதிக்கு எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லையெனத் தெரிவித்த கொழும்பு - கோட்டை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒலிப்பதிவை பெற்று தரமறுத்த பெண்ணின் நகை அபகரிப்பு

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எத்திவெவ வெஹெரயாய, பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரிடமிருந்து சனிக்கிழமை (09) இரவு தங்க நகையைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் மூவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவிட்ட பெண், தனது தந்தை மற்றும் மூத்த சகோதரியுடன் வசித்து வருகின்ற நிலையில், வீட்டின் முன் கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

காலை ஆறு மணிக்குத் திறக்கும் கடையானது, இரவு 9 மணியளவில் மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சனிக்கிழமை (09) இரவு 7.30 மணியளவில், வீட்டின் பின்புறம் வசிக்கும் மூவர், மற்றுமொரு நபருக்கு சொந்தமான ஒரு ஒலிப்பதிவை தங்களுடைய கைத்தொலைபேசிக்கு பெற்றுத் தருமாறு கூறியுள்ளனர்.

அதற்கு அப்பெண் மறுப்பு தெரிவித்துள்ளார். அத்துடன், ஒலிப்பதிவுக்குச் சொந்தமான நபரும் அக்கடையில் இருந்துள்ளார். அவருடன் முரண்பட்டு, அவரையும் தாக்கியுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர்களைத் தடுத்த அப்பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்க நகையை அம்மூவரும் அபகரித்து, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சுமார் ஒரு பவுன் எடையுள்ள குறித்த தங்க நகையின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யானை தாக்குதலில் குடும்பஸ்தர் மரணம்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, திக்கோடை தும்பாலைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை(10) இரவு காட்டுயானைத் தாக்குதலுக்கிலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் திக்கோடைக் கிராமத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான கார்த்திகோசு உருத்திரகாந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

கருங்கல் உடைக்கும் இடத்தில் இருந்தபோதே இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்கிலக்காகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்களுக்கு மீண்டும் வைரஸ்

சிறுவர்களுக்கு மத்தியில் காய்ச்சல் அதிகரித்து வருவதாக ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏறக்குறைய மூன்று நாட்களுக்குக் காய்ச்சல் நீடித்தால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

“அண்மைய நாட்களாகக் குழந்தைகளுக்கு இடையில் வைரஸ் காய்ச்சல் அதிகரித்துள்ளது. இது இருமல் மற்றும் சளியுடன் கூடிய காய்ச்சலாகும். மேலும், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே இருமல், சளி, காய்ச்சல், உடல்வலி, வாந்தி இருந்தால் வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறியாகும். எனவே, மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், உரிய இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.” என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# “போட்டியாளர்களுக்கு வசதிகள் வழங்கப்படும்”


சிவா ஸ்ரீதரரால்

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முதல் சர்வதேச சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றும் சப்ரகமுவ மாகாண மாணவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை சப்ரகமுவ மாகாண சபையின் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

எஹலியகொடை தேசிய பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை (07) நடைபெற்ற தேசிய மாணவர் தர வட்டத்தின் (SSQCAS) நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச போட்டிகளில் பங்குபற்றும் சப்ரகமுவ மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குத் தேவையான





வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அடுத்த வருடம் முதல் இவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு சப்ரகமுவ மாகாண சபை செயற்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், இந்திய GEMS கல்வி





நிறுவனத்தின் தலைவர் கலாநிதி தீரஜ் மெஹ்ரோத்ரா, சப்ரகமுவ மாகாணத்தின் பிரதான செயலாளரும் சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர் தர வட்ட அமைப்பின் (SSQCAS) பணிப்பாளருமான மஹிந்த எஸ்.வீரசூரிய, சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி , பங்களாதேஸ் மக்கள் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் பேராசிரியர் காசி ஷெரீப் உதீன், சப்ரகமுவ மாகாண கல்வி பணிப்பாளர் தர்ஷனி இந்தமல்கொட உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வி அதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள்ம ற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# சுன்னாகம் சம்பவத்துக்கு உரிய நடவடிக்கை அவசியம்

பொலிஸ் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர், அந்த நபரின் கடந்த காலத்தை ஆராய்வார்கள். அடுத்து, அந்த நபரின் சகோதரர்கள் மற்றும் உறவினர்களின் கடந்த காலமும் பார்க்கப்படுகிறது. இது வளர்ந்த நாடுகளால் தற்போது தூக்கி எறியப்பட்ட ஒரு பாரம்பரியமாகி விட்டது.

நமது நாட்டில் இன்னுமிருக்கிறது. உங்கள் தந்தை அல்லது தாத்தா அல்லது பெரியப்பா ஒரு குற்றத்தில் ஈடுபட்டாரா? என விண்ணப்பத்தில் ஒரு கேள்வியிருக்கும். அந்த கேள்விகளுக்கு ஆம் என பதிலளித்திருந்தால், பொலிஸில் வேலைவாய்ப்பு கிடைக்காது. எனினும், சுன்னாகம் பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை பார்க்குமிடத்து, மயிர்கூச்செறிய செய்கின்றது.

பச்சிளம் குழந்தையைத் தூக்கி வீசி, இளம் தாயார் மீதும் அவரது கணவர் உள்ளிட்டவர்கள் மீதும் சுன்னாகம் பொலிஸார் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்துவதாக, சமூக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் காணொளிகளில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்காமலே போன காலமும் உண்டு. நாங்கள் அழைத்துச் செல்லவே இல்லையென, பொலிஸாரும், படைத்தரப்பினரும் கையை விரித்து விடுவார்கள். உறவினர்களை இழந்தவர்கள் இன்னும் தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

எனினும், இந்த யுகத்தில் அவற்றுக்கெல்லாம் இடமில்லை. சம்பவமொன்று இடம்பெற்ற உடனேயே கையிலிருக்கும் அலைபேசியை எடுத்துக் கொள்வோர், ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் ஒலி, ஒளிப்பதிவு செய்து விடுகின்றனர். ஆகையால், எந்தத் தரப்பாக இருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பமுடியாது.

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் வடக்கில் பொலிஸ் அராஜகத்தையே முன்னெடுக்கிறது என்ற குற்றச்சாட்டு, சுன்னாகம் சம்பவத்துக்குப் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆக, அவ்வாறு இல்லை, சகலருக்கும் சமமான நீதியே உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும். அத்துடன், குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பொலிஸ் திணைக்களத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான சட்டம் மிகவும் பழைமையானது. பல பொலிஸ் நிலையங்களில் கணினிகள் இல்லை, சில பொலிஸ் நிலையங்களில், புகார்களைத் தட்டச்சுப்பொறிகளில் தட்டச்சு செய்கிறார்கள். உள்கட்டமைப்பு வசதிகளில் நமது பொலிஸ் எந்த நவீன நிலையை அடையவில்லை.

நமது நாட்டில் பொலிஸாரினால் இவ்வாறு அடாவடித்தனமாக நடந்து கொண்டமை இது முதன்முறையல்ல. எனினும், புதிய அரசாங்கத்துக்கு இவ்வாறான சம்பவங்கள் இழுக்கை ஏற்படுத்தும், சிறுபான்மை இனங்களை, குறிப்பாக, வடக்கில், தமிழர்களை பொலிஸார், அடாவடித்தனமாக நடத்துகின்றனர் என்ற படத்தைக் காண்பித்து விடும் என்பதால், அரசாங்கம் மிகக் கவனமாக இந்த விடயத்தைக் கையாளவேண்டும்.

இலங்கையின் தண்டனைச் சட்டம் மிகவும் பழைமையானது. மேலும், பாதுகாப்புப் படையினரைப் பாதிக்கும் கட்டளைகளும் மிகவும் பழமையானவை. இவை தொட்டவுடன் இரண்டாக உடையும் அளவுக்கு உடையக்கூடியவை. இதன் காரணமாக மக்களுக்கு நடக்கக்கூடிய அநீதியும் துஷ்பிரயோகமும் பெரிது. ஆகையால், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், அரசாங்கம் அதிரடியான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.






முஸ்லிம் பிரதிநிதித்துவமும்

# ஒப்பீட்டுத் தெரிவுக்கு வாக்களித்தலும்

மொஹமட் பாதுஷா

பொதுத் தேர்தலுக்கான பிரசாரங்கள் அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டன. 14ஆம் திகதி வாக்களிப்புக்கு முன்னதாக இரண்டு நாட்கள் 'அமைதிக் காலம்' கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இது தேர்தல் பரப்புரைப்புகளுக்கான அமைதிக்காலம் என குறிப்பிடப்பட்டாலும், உண்மையில், மக்கள் அமைதியாக இருந்து, யாருக்கு வாக்களிப்பது என்று இறுதி முடிவெடுப்பதற்கான இறுதி நாட்கள் என்றும் சொல்லலாம்.

எனவே, நாட்டிலுள்ள மூவின மக்களும் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுக்க வேண்டிய தருணமிது. வெறுமனே கட்சிகள், பழையவர், புதியவர் என்ற அடிப்படையில் நோக்காமல், ஒப்பீட்டளவில் 'யார் நமது எம்.பியாக இருப்பதற்கு பொருத்தமானவர்' என்பதை சரியாகத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இலங்கை அதிகளவு எழுத்தறிவு கொண்ட நாடாகக் காணப்பட்டாலும், வாக்குகளைச் சரியாக அளிப்பதில் சிலர் தெளிவற்றவர்களாக உள்ளனர். செல்லுபடியாகும் தன்மையுடன் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து போதுமானளவுக்கு தெளிவூட்டல் மேற்கொள்ளப்படவில்லை சாதாரண வாக்காளர்களின் வாக்குகள் மட்டுமன்றி, அரச ஊழியர்களின் தபால்மூல வாக்குகளும் கணிசமான அளவுக்கு நிராகரிக்கப்படுகின்ற நிலை உள்ளது.

எனவே, மேலிருந்து கீழ்நோக்கி இரண்டு நிரல்களைக் கொண்ட அகலமான வாக்குச் சீட்டில் உள்ள கட்சிச் சின்னங்களுக்கு எதிரே உள்ள கூண்டில் புள்ளடியிடுவதுடன், கீழ்ப் பகுதியில் உள்ள விருப்பு இலக்கங்களிற்கு மேலாக புள்ளடியிட வேண்டும். இவ்வாறு ஆகக் கூடுதலாக 3 விருப்பத் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

வாக்களிப்பதற்காகச் செல்வதற்கு முன்னர் நாம் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை அறுதியும் உறுதியுமாக எடுத்துவிட வேண்டியது. குறிப்பாக முஸ்லிம் சமூகம் இத்தேர்தலில் மிகவும் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. இதே தேவை தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது.

சிங்கள மக்கள் எப்படி வாக்களித்தாலும், அமையப் போகின்ற பாராளுமன்றத்தில் அவர்களது பிரநிதித்துவங்களுக்கு பாதிப்பு வரப் போவதில்லை. ஆனால், சரியான முறையில் முஸ்லிம்கள் வாக்களிக்கத் தவறுவார்களாயின் அது எதிர்கால அரசியலில் பாரிய சிக்கலைக் கொண்டு வரலாம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

கடந்த பாராளுமன்றங்களில் சுமார் 20 முஸ்லிம் எம்.பிக்கள் பதவி வகித்தனர். சமூகத்தின் விடிவுக்காக இவர்கள் கூட்டாக தமது அரசியல் பலத்தைப் பிரயோகிக்கவில்லை. குறிப்பாக முஸ்லிம் கட்சிகளின் சார்பாகப் பாராளுமன்றம் சென்றவர்களாவது, 'முஸ்லிம்களுக்கான அரசியலை' செய்யவில்லை. இதற்குப் பல சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம்.

வடக்கு, கிழக்கில் மூன்று காங்கிரஸ்களும் தனித்துவ அடையாள அரசியலை சமூகத்திற்கானதாக முன்னெடுக்கவில்லை. இணக்க அரசியல் அல்லது பேரம் பேசும் உத்தி என்ற அடிப்படையில், பெரும்பான்மைக் கட்சிகளின் உப கட்சிகள் போல, அங்கீகரிக்கப்பட்ட முகவர் போல முஸ்லிம் அணிகள் செயற்பட்டதுதான் அதிகம்.

வடக்கு, கிழக்கிற்கு வெளியே தனித்துவ அரசியல் செயற்பாட்டில் இல்லை. சிங்கள மக்களுடன் வாழும் முஸ்லிம்கள் அங்கு அந்த மக்களுக்கு ஒத்திசைவான அரசியல் முடிவுகளையே எடுக்க வேண்டியுள்ளது.

ஆனால் இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கிற்கு வெளியே தெரிவான பெரும்பாலான முஸ்லிம் எம்.பிக்களும் தமது சமூகத்தின் அபிலாஷைகள் விடயத்தில் சோபிக்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

கடந்தகால சம்பவங்களை அறிந்திராத இளைஞர்கள் மட்டுமன்றி, மேற்குறிப்பிட்ட ஏமாற்று அரசியல்வாதிகளால் வெறுப்படைந்த மூத்தவர்களும், இன்று மாற்றம் என்ற அலையை நோக்கி நகர்வதற்கு முஸ்லிம் தலைவர்கள். எம்.பிக்களின் கடந்தகால அரசியலே காரணமாகும்.

எவ்வாறிருப்பினும், இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் தம்முடைய பிரதிநிதித்துவத்தை எண்ணிக்கை அடிப்படையில், காப்பாற்றுவதுடன், தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு எம். பியும் அப்பதவிக்குப் பொருத்தமானவராக, தரமானவராக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயமுள்ளது.

இதுகாலவரை முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு ஆண்டாண்டு காலமாக எம்.பி. பதவிகளை நன்றாகச் சுகித்துக் கொண்டு சமூகத்திற்கான அரசியலில் பெரும் தவறிழைத்தவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மூலம் நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் தொடராக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகளிலும் முஸ்லிம் எம்.பிக்கள் தெரிவாக வேண்டும் அதுதான் இலங்கைச் சூழலில் சிறந்த அணுகுமுறையாக இருக்க முடியும்.

ஆனால், இங்கு ஒரு முக்கிய நிபந்தனை இருக்கின்றது. அதாவது, எந்தக் கட்சியில் முஸ்லிம் ஒருவர் போட்டியிட்டாலும் அவர் பழையவரா? புதியவரா? எங்கள் ஊரைச் சேர்ந்தவரா என்று பார்க்கத் தேவையில்லை. அவரது கட்சியின் செல்வாக்கையும் பெரிதாக கருத்திற்கொள்ள வேண்டியதில்லை.

குறிப்பிட்ட வேட்பாளர் முஸ்லிம் கட்சியில் நேரடியாகப் போட்டியிட்டாலும், முஸ்லிம் கட்சிகள் சார்பாகப் பெரும்பான்மைக் கட்சியில் இணைந்து போட்டியிட்டாலும், அல்லது என்.பி.பி. யில் நேரடியாகப் போட்டியிடுபவராக இருந்தாலும், அவர் முஸ்லிம் சமூகத்தின் எம்.பியாக பதவி வகிப்பதற்குப் பொருத்தமானவரா, தகுதியானவரா என்று மட்டுமே மக்கள் பார்க்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினராக, முழுநேர அரசியல்வாதியாக இருப்பது என்பது இலகுவான காரியமல்ல. முஸ்லிம் கட்சியின் எம்.பியாக இருந்தாலும், பெரும்பான்மைக் கட்சியின் எம்.பியாக தெரிவானாலும், சமூக உணர்வு மிக முக்கியமாகும். எனவே, அந்த சுமையைச் சுமக்கக் கூடிய, கனதியான எம்.பிக்களை மட்டுமே தெரிவு செய்ய வேண்டும்.

முன்னாள் அரசியல்வாதியை விட சிறந்த ஒரு புதுமுக வேட்பாளர் இருப்பாராயின், அவருக்கு வாக்களிக்கலாம். ஆனால், பழைய எம்.பிக்கு பாடம் புகட்டுதல் என்ற தோரணையில் அவரை விடப் பொருத்தமற்ற ஒரு புதியவரை முஸ்லிம் கட்சியிலோ அல்லது பெரும்பான்மைக் கட்சிகளிலோ தெரிவு செய்ய முடியாது. என்.பி.பியில் போட்டியிடுகின்றவரோ எஸ்.ஜே.பியில் போட்டியிடுபவரோ அல்லது முஸ்லிம் கட்சிகளில் களமிறங்கி இருக்கின்றவர்களோ, யாராக இருந்தாலும் குறிப்பிட்ட மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் சிறந்தவருக்கு, பொருத்தமானவருக்கே முஸ்லிம்கள் புள்ளடியிடக் கடமைப்பட்டுள்ளார்கள்.

முஸ்லிம் கட்சிகளில் அல்லது பெருந்தேசியக் கட்சிகளில் போட்டியிடுகின்ற புதுமுக வேட்பாளர்கள் - பழைய எம்.பிக்களை விட ஒப்பீட்டளவில் 'சிறந்த மாற்றுத் தெரிவுகளா' என்பதை ஒவ்வொரு முஸ்லிம் வாக்காளர்களும் ஒப்பீட்டு பார்க்க வேண்டும்.

பழையவர்களுக்குப் பதிலாக புதியவர் என்ற ஒரேயொரு தகுதிக்காக மட்டும் எம்.பிக்களை தெரிவு செய்யமுடியாது.

பொருத்தமற்ற புதுமுக வேட்பாளர்கள் இல்லாத பிரதேசங்களில் உள்ள ஒப்பீட்டளவில் சிறந்த மூத்த அரசியல்வாதியை அவர் பழையவர் என்ற ஒரே காரணத்திற்காக ஒதுக்கி விடவும் கூடாது.

இங்கு சிறந்த ஒப்பீட்டுத் தெரிவுக்கு வாக்களிப்பதே முக்கியமானது என்பதை முஸ்லிம்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது, பழையவரா? புதுவரவா? அல்லது முஸ்லிம் கட்சியில் போட்டியிடுகின்றாரா? அல்லது பிரபலமான பெரும்பான்மைக் கட்சியில் களமிறங்கியுள்ளாரா? என்ற அளவுகோலால் முஸ்லிம்கள் அளவிடக் கூடாது.

மாறாக, அவர் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் இந்த எம்.பி. பதவிக்கு, முஸ்லிம் சமூக அரசியலைச் சுதந்திரமாகக் கொண்டு செல்வதற்குப் பொருத்தமானவர்களே தெரிவு செய்யப்பட வேண்டும்.


கனதியான புதிய வேட்பாளர் இல்லாத இடங்களில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை என்று கருதப்படும் பழையவரே தெரிவு செய்யப்படலாம். மாற்றம் அல்லது மாற்றுத் தெரிவு என்ற பெயரில் தெரிவு செய்யப்படும் வேட்பாளர், முன்னர் இருந்த எம்.பியை விடச் சிறந்த ஒப்பீட்டுத் தெரிவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த அறிவுரை தமிழ் மக்களுக்கும் பொருந்தும்.

அதேநேரம், முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் சமூகத்திற்கான தனித்துவ அடையாள அரசியலைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி உள்ளமை உண்மைதான். ஆனால், அரசியல்வாதிகள் செய்த தவறுக்காக அஷ்ரப் முன்மொழிந்த அந்த அரசியலை இல்லாதொழிக்க முடியாது என்பதைக் கவனிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில், முஸ்லிம்கள் என்.பி.பி. போன்ற பெரும்பான்மைக் கட்சிகளில் கட்டாயம் பங்காளியாக இருக்க வேண்டும். சமகாலத்தில் முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலையும் ஒட்டுமொத்தமான எம்.பிக்களின் எண்ணிக்கை பாதுகாக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

அதனடிப்படையில் முஸ்லிம் கட்சிகள் சார்பான வேட்பாளர்களில் பொருத்தமானவர்கள், சிறந்த ஒப்பீட்டுத் தெரிவாக கருதப்படுவார்களைத் தெரிவு செய்யப்படலாம். அத்துடன், என்.பி.பி., எஸ்.ஜே.பி. மற்றும் சிலிண்டர் அணி போன்றவற்றின் ஊடாகவும் நல்ல எம். பிக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். இதனடிப்படையில் எம்.பிக்க்ளின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படுவது அவசியம். எனவே, ஒரு பழையவரா புதியவரா அந்தக் கட்சியா இந்த அணியா என்று பார்க்காமல், பொருத்தமானவரா என்ற அளவுகோலால் மட்டும் அளவிட வேண்டும், சமூக அரசியலுக்கு தகுதியானவர்களால் முஸ்லிம் சமூகம் தனது அரசியலை நிரப்ப வேண்டும். 14ஆம் திகதி நீங்கள் பிழையானவருக்கு புள்ளடியிட்டு விட்டு, பிறகு கவலைப்படுவதால் எந்தப் பலனுமில்லை.



## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள், அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன் பிறந்தேன் என சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது, எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்படுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள், வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மகளை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### சுகாதார சீர்கேடான பேருந்து நிலையம்

நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவர்கள், பேருந்து சாரதிகள், நடத்துநர்கள், ஹட்டன் நகரில் உள்ள பிரதான தனியார் அரச பேருந்து தரிப்பிடத்திற்கு வந்து செல்கின்றனர்.

அத்துடன் பிரதான பேருந்து தரிப்பிடத்தில் பல வர்த்தக நிலையங்கள் ஹோட்டல்கள் உள்ளன. இந்நிலையில், பாரிய சுகாதார சீர்கேடான கழிவறையால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதன் காரணமாகத் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது.

தீப திருநாள் என்பதால் ஆயிரக்கணக்கான பயணிகள் இந்த வாரம் அந்த பேருந்து தரிப்பிடத்தில் ஒன்று கூடுவர் ஆகையால் ஹட்டன் நகர சபை முன் வந்து இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அங்கு உள்ள பொது கழிவறையை மூடி நவீன முறையில் கழிவறை அமைக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்

– செ.தி. பெருமாள்

## புதிய பாராளுமன்றத்தின்

# முதல் நாள்



பத்தாவது பாராளுமன்றத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் 196 உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவு செய்யப்படும் 29 உறுப்பினர்கள் என ஒட்டுமொத்தமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நவம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறும் என ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட 2024.09.24ஆம் திகதியை 2403/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு நாளில் பல்வேறு முக்கியமான நடவடிக்கைகள் இடம்பெறுவதால், அன்றைய நாள் மிகவும் விசேடமானதாகும்.

முதலாவது அமர்வு நாளில் சபாமண்டபத்தில் இடம்பெறும் செயற்பாடுகளில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகிறது. முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன், விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். செங்கோல் சபா மண்டபத்தில் வைக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாகச் சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசியலமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களின்பின்னர், மூலம் நியமித்தல், சபாநாயகரின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை அதன் பின்னர் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தலைவரும், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்வது இடம்பெறும்.

### சபாநாயகர் நியமனம்

பாராளுமன்றத்தில் உள்ள எந்தவொரு உறுப்பினரையும் சபாநாயகராகத் தெரிவு செய்து நியமிக்க முடியும். எனினும், உறுப்பினர் குறித்த முன்மொழிவுக்கு அமையத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எவராவது உறுப்பினர் ஒருவரின் பெயரை சபாநாயகராகத் தெரிவு செய்யுமாறு உறுப்பினர் ஒருவர் முன்மொழிந்து, மற்றொருவர் வழிமொழிய வேண்டும் என்பதுடன், இது தொடர்பில் விவாதம் மேற்கொள்ள முடியாது.

முதலில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என செயலாளர் நாயகம் சபைக்கு அறிவிக்க வேண்டும். இதன்போது, எவராவது ஓர் உறுப்பினர் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றால் குறித்த உறுப்பினரின் பக்கம் செயலாளர் நாயகம் பார்த்து நிற்க அந்த உறுப்பினரின் யோசனை சபைக்கு முன்வைக்கப்படும். ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வேறு நபர்களின் பெயர்கள் உள்ளனவா என செயலாளர் நாயகம் சபையிடம் வினவுவது கட்டாயமாகும். அவ்வாறு வினவும்போது, பிறிதொரு நபரின் பெயர் முன்வைக்கப்பட்டிருக்காவிட்டால் குறித்த உறுப்பினர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த உறுப்பினரின் பெயரை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த உறுப்பினர்கள் இருவரும் கையில் பிடித்துச் சென்று அவரை அக்கிராசனத்தில் அமர்த்துவது வழமையாகப் பின்பற்றப்படும் சம்பிரதாயமாகும்.

அதனைத் தொடர்ந்து, சபாநாயகரினால் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இதனைப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கொண்டு வைப்பார். இவ்வாறு பதவிச்சத்தியம் செய்துகொண்ட சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்வதற்கு முன்னர் தான் தெரிவுசெய்யப்பட்டமைக்கு நன்றி தெரிவித்து சிறியதொரு உரையாற்றுவதும் சம்பிரதாயமாகும். தெரிவு செய்யப்பட்ட புதிய சபாநாயகருக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபாநாயகரும் நன்றி தெரிவித்து உரையாற்றுவார். அதன் பின்னர் சபா மண்டபத்திலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்துக்கொள்வர்.

சபாநாயகர் பதவிக்கு இரண்டு உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். இவ்வாறு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு பாராளுமன்ற முறைமையில் காணப்படுகின்றன. அவையாவன, சபாநாயகர் தெரிவு, பிரதிச் சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு போன்றவற்றின் போதும், பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பதிலுமாகும்.

அவ்வாறான வாக்கெடுப்பின் போது, ஐந்து நிமிடங்கள் வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதற்காக சபையில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகரிடமிருந்து வாக்குச்சீட்டொன்று வழங்கப்படும். இந்த வாக்குச் சீட்டில் சபாநாயகராகத் தெரிவு செய்ய விரும்பும் நபரின் பெயர் மற்றும் வாக்களிக்கும் உறுப்பினரின் கையொப்பம் என்பன இடப்பட்டு, வெளியில் தெரியாதவாறு மடிக்கப்பட்டு வாக்குப் பெட்டியில் இட வேண்டும்.

வாக்களிப்பு நடத்தப்படும் முறை மற்றும் வாக்குகளின் எண்ணிக்கையை மேற்கொள்வதற்கான பொறுப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தையே சாரும். செயலாளர் நாயகத்தின் மேசையிலேயே (*Table of Parliament*) வாக்குகள் எண்ணப்படும். மேசையில் வாக்குகள் எண்ணப்பட்டதும், அதன் முடிவுகள் சபைக்கு அறிவிக்கப்படும். எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குச் சீட்டில் வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினரின் கையொப்பம் இடப்பட்டிருக்கா விட்டால் அவை செல்லுபடிற்ற வாக்குகளாகக் கணக்கெடுக்கப்படும்.

சபாநாயகர் பதவிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் குறைந்த வாக்குகளைப் பெற்ற உறுப்பினரின் வாக்குகள் நீக்கப்பட்டு மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன் பின்னர் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் கூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர், சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவார். அதேநேரம், பல பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்டிருந்தால், மேலே குறிப்பிடப்பட்டது போல, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்த வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்களின் வாக்குகள் நீக்கப்பட்டு எஞ்சிய உறுப்பினர்களுக்கிடையில் மீண்டும் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இறுதியில் அதிக வாக்குகளைப் பெறும் உறுப்பினர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவார்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மூன்று உறுப்பினர்கள் போட்டியிடும்போது இரண்டு உறுப்பினர்களுக்கு மத்தியில் சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைக்பெற்றிருந்தால், சமமான வாக்குகள் உள்ள அவ்வேட்பாளர்களுக்கிடையே எவர் விலக்கப்பட வேண்டியவர் என்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டின் மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். இரண்டு உறுப்பினர்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் போட்டியிடும் இருவரும் சமமான வாக்குகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இருந்தபோதும் அந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் யாரை சபாநாயகராகத் தெரிவுசெய்வது என்பதைத் திருவுளச் சீட்டின் மூலம் தீர்மானிக்கும் பொறுப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்குக் காணப்படுகின்றது. இதில் திருவுளச் சீட்டுப் போடும் முறை பற்றித் தீர்மானிக்கும் உரிமையும் செயலாளர் நாயகத்துக்குக் காணப்படுகின்றது.

வாக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்களை ஆகக் குறைந்தது ஒரு மாத காலம் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேண வேண்டியதும், பாராளுமன்றத்திடமிருந்து பெறக்கூடிய ஏதேனும் பணிப்பிற்கமைய செயலாளர் நாயகம் வாக்குச் சீட்டுப் பத்திரங்களை அழித்து விட்டு அதனைப் பாராளுமன்றத்திற்குச் சான்றுப்படுத்தலும் செயலாளர் நாயகத்தின் கடமையாகும்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் முதலாவது பாராளுமன்ற நாள் அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். இதில் சபாநாயகர் முதன்முதலில் கையொப்பமிடுவார் என்பதுடன், அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடுவது சம்பிரதாயமாகும். இந்தப் பெயர் அட்டவணைப் புத்தகம் பாதுகாப்பான ஆவணமாகப் பேணப்படும்.

முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்தில் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். இவர்களின் தெரிவுகள் இடம்பெறும்போது சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அக்கிராசனத்தில் இருப்பதனால் குறித்த அறிவிப்பு மற்றும் வாக்கெடுப்புப் போன்றன சபாநாயகரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும். பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் பதவிக்கு ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டிருந்தால், வேறு எவரினதும் பெயர்கள் முன்மொழியப்படுகின்றனவா என சபையிடம் வினவவேண்டிய பொறுப்பு சபாநாயகருடையதாகும். அவ்வாறு வேறு பெயர்கள் முன்மொழியப்படாவிட்டால் குறித்த உறுப்பினர் பிரதி சபாநாயகர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவார்.

ஏதாவது சந்தர்ப்பத்தில் இந்தப் பதவிகளுக்காக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டி ஏற்பட்டால் சபாநாயகரின் தெரிவின்போது பின்பற்றப்பட்ட வாக்களிப்புமுறை பின்பற்றப்படும். இதன்போது வாக்கெடுப்பு நடத்தப்படுவது பற்றிய அறிவிப்பை வெளியிடுவது செயலாளர் நாயகத்திற்குப் பதிலாக சபாநாயகர் என்பது விசேடமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல் நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்படும் நாள் பெரும்பாலும் அடுத்த பாராளுமன்ற அமர்வு நாளாகவிருக்கும்.

இருந்தபோதும், அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் அன்றையதினம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப்படுவதாயின், முதல் நாளின் பிரதான பணிகள் முடிவுக்கு வந்ததும் தற்காலிகமாகச் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குத் தலைமை தாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த முடியும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி பாராளுமன்றத்தை அடுத்த அமர்வு தினத்துக்கு ஒத்திவைப்பார்.



# மீண்டும் இணையும் ஹிட் கூட்டணி

பிரபல இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகி வரும் 'தக் லைப்' படத்தின் படப்பிடிப்பு பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது.

சிம்பு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இப்படம் அடுத்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி வெளியாக உள்ளது.

இதையடுத்து மணிரத்னத்தின் அடுத்த படத்தில் அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் ஜோடி மீண்டும் இணைந்து நடிக்க இருப்பதாகவும், மணிரத்னம் தயாரித்து இயக்கும் இந்த படம் ஹிந்தியில் உருவாக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தி திரையுலகின் நட்சத்திர ஜோடியான அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் இருவரும் ஏற்கெனவே மணிரத்னம் இயக்கிய 'குரு' மற்றும் 'ராவணன்' திரைப்படத்தில் இணைந்து நடித்துள்ளனர். இது இவர்களின் கூட்டணியில் உருவாகும் 3ஆவது படமாக அமையவுள்ளது.

அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் ஜோடி கடந்த 2007ஆம் ஆண்டு காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஆராத்யா என்ற பெண் குழந்தை உள்ளது.

இருவரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருவதாகத் தகவல் வெளியாகி வரும் நிலையில், இந்த புதிய படத்தில் இருவரும் இணைந்து நடித்தால் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தனுஷின் 'குபேரா' அதிரடி அப்டேட்



தனுஷ், ராஷ்மிகா மந்தனா நடிப்பில் சேகர் கம்முலா இயக்கத்தில் உருவாகி வரும் 'குபேரா' படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது.

இந்தத் திரைப்படம் அடுத்த வருடம் பெப்ரவரி 27ஆம் திகதி வெளியாக இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், புரமோஷன் பணிகளைத் தொடங்க படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி 'குபேரா' படத்தின் ஃபர்ஸ்ட் க்ளிம்ப்ஸ் வீடியோ நவம்பர் 15ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலைப் புகைப்படத்துடன் ராஷ்மிகா மந்தனா தனது சமூக வலைத்தளத்தில் அறிவித்துள்ளார்.

தனுஷின் ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடித்துள்ள இந்த படத்தில் முக்கிய வேடத்தில் நாகார்ஜுனா நடித்துள்ளார். இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்து வருகிறார்.



# 'கேம் சேஞ்சர்'


தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம் சரண், இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் 'கேம் சேஞ்சர்' திரைப்படத்தில் நடித்து இருக்கிறார்.

இந்த படத்தில் கியாரா அத்வானி கதாநாயகியாக நடிக்க எஸ்.ஜே.சூர்யா, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி உட்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஊழல் அமைப்புக்கு எதிராகப் போராடி நீதியை நிலைநாட்டும் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக ராம் சரண் நடித்துள்ளார்.

முன்னதாக, 'கேம் சேஞ்சர்' படத்தை டிசெம்பர் 20ஆம் திகதி வெளியிட படக்குழு திட்டமிட்டிருந்தது. பின்னர் படம் பொங்கல் வெளியீடாக அடுத்தாண்டு ஜனவரி 10ஆம் திகதி திரைக்கு வரும் என தயாரிப்பு நிறுவனம் அறிவித்தது. இந்த நிலையில் இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. டீசர் வெளியான 24 மணி நேரத்திலேயே சுமார் 70 மில்லியன் பார்வைகளைக் கடந்துள்ளது. அந்த வகையில், அதிக பார்வைகளைப் பெற்ற படங்களின் வரிசையில் 'கேம் சேஞ்சர்' படத்தின் டீசர் 2ஆவது இடத்தில் உள்ளது. 'சாலர்' படத்தின் டீசர் 83 மில்லியன் பார்வைகளைக் கடந்து முதல் இடத்தை பெற்றுள்ளது.

# மீண்டும் இணையும் பிரபாஸ் – த்ரிஷா



தமிழ் திரையுலகில் 21 ஆண்டுகளாக முன்னணி நடிகையாக வலம் வரும் நடிகை த்ரிஷா, 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் நடித்த குந்தவை கதாபாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இவர் தற்போது அஜித்துடன், விடாமுயற்சி, குட் பேட் அக்லி மற்றும் கமலின் தக் லைப் ஆகிய படங்களில் நடித்து வருவதுடன், தெலுங்கில் நடிகர் சிரஞ்சீவியுடன் 'விஸ்வம்பரா' படத்திலும், மலையாளத்தில் இரண்டு படங்களிலும் நடித்து வருகிறார்.

இப்படி அடுத்தடுத்த படங்களில் நடித்து வரும் நடிகை த்ரிஷா அடுத்ததாக பிரபாஸுடன் இணைந்து நடிக்க உள்ளதுடன், இந்தப் படத்தை சந்தீப் ரெட்டி இயக்க உள்ளார்.

தற்போது பிரபாஸ் நடிக்கும் 'ராஜா ஷாப்' படம் நிறைவடைந்தவுடன் புதிய படம் தொடங்க உள்ளது. ஏற்கெனவே, பிரபாஸுடன் இணைந்து பௌர்ணமி, புஜ்ஜி காடு போன்ற திரைப்படங்களில் த்ரிஷா நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடின உழைப்பின் அடையாளம் மரியதாஸ் நிதர்சன்



எஸ்.அபிசேகன்,
ஊடக கற்கை,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நிறைந்திருக்கும் ஆற்றல்கள் வெவ்வேறுபட்டவை. ஆனால், சிலர் தனக்குள் என்ன திறமை இருக்கிறது என்பதை அறியாமல் ஏதோவொரு துறைக்குள் பிரவேசித்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். என்றும் நமக்குப் பிடித்த துறையில் பயணிக்கும் போதே உண்மையான சந்தோஷம் கிடைக்கின்றது.

அந்தவகையில், பாடசாலை காலம் முதலே தனக்கு ஆர்வமான துறையினை அடையாளம் கண்டு, இன்று முதல் தனக்குப் பிடித்த துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் மற்றும் தேசிய ரீதியிலும் பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் உதைபந்தாட்ட வீரர் யாழ். நாவாந்துறை சென் மேரிஸ் அணியின் நட்சத்திர வீரரான மரியதாஸ் நிதர்சன்.

**கேள்வி : பல சாதனைகளுக்கு சொந்தக்காரரான உங்களது வாழ்க்கைப் பயணத்தின் ஆரம்பக்கட்ட சிறிய அறிமுகத்தினை வழங்குங்கள்.**

பதில்: எனது பெயர் மரியதாஸ் நிதர்சன். எனது ஆரம்பக் கல்வியை யாழ். நாவாந்துறை றோ.க. தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியினை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றேன். எனது குடும்பத்தில் 6 உறுப்பினர்கள் நான் கடைசிப் பிள்ளை. எனக்கு சிறு வயது முதலே உதைபந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம். எனது தந்தையார் ஓர் உதைபந்தாட்ட வீரராவார். அத்தோடு, என்னுடன் பிறந்த இரு மூத்த சகோதரர்களும் உதைபந்தாட்ட வீரர்களே. மேலும், எமது நாவாந்துறை மண்ணின் அடையாளமாக உதைபந்தாட்டம் விளங்குவதால் எனக்கு உதைபந்தாட்டம் மீது இயல்பாகவே அதீத ஆர்வம் ஏற்பட்டது.

**கேள்வி: பல துறைகளில் சாதித்து வரும் இளைஞர்கள் மத்தியில் பாடசாலை காலம் முதலே உதைபந்தாட்டத்தில் உங்களுக்கு உண்டான ஆர்வத்தினை பற்றிக் கூற முடியுமா?**

பதில்: இன்றைய சூழலில் பல்வேறுபட்ட துறைகளிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகின்றார்கள். அதுமட்டுமன்றி, உலகளவிலும் பல சாதனைகளைப் புலம்பெயர் தேசங்களிலும் படைத்து வருகின்றார்கள். பாடசாலை காலம் முதலே எனக்கு உதைபந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் எப்படி உருவானதென்றால், எமது ஊரிலே இரவு பாடசாலை நடைபெறுவது வழமை. இரவு நேரங்களில் அங்குள்ள இளைஞர்கள், மாணவர்களை ஒன்றிணைத்து கல்வியினை வழங்குவார்கள். அவ்வாறு நான் இரவு பாடசாலைக்கு செல்கின்றபோது, அங்குள்ள விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நின்று எமது வீரர்கள் விளையாடுவதை ரசிகர்கள் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்கள். அதைப்பார்க்கும் போது, எனக்கும் அந்த உதைபந்தாட்டத்தை விளையாட வேண்டும், நானும் இப்படி உருவாக வேண்டும் என்ற ஆர்வம் என்னிலே உருவானது. அதனால், எனது ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பாடசாலை மட்டங்களிலான போட்டிகளில் பங்குபற்றினேன். எமது அணியானது வலய மட்டம், மாவட்டம், மாகாணம் என பலதரப்பட்ட நிலைகளிலும் சாதனைகளைப் புரிந்தது.

அந்த அணிக்கு நான் தலைமை தாங்கியிருந்தேன். இவ்வாறாகப் பாடசாலை காலங்களில் பல வயது பிரிவுகளில் நான் சிறுவயது முதலே இந்த உதைபந்தாட்டத்தை விளையாடி வருகின்றேன். அதுமட்டுமன்றி, உயர்தரத்திற்காக எமது பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்ற வேளை, எமது பத்திரிசியார்



கல்லூரி அணி பல மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலும் சாதனை படைத்திருக்கின்றது. அந்த அணியினுடைய அணித் தலைவராகவும் அணி வீரராகவும் நான் விளையாடியிருக்கின்றேன். பாடசாலைகளில் பல விருதுகளையும் பெற்றிருக்கின்றேன். அது என்றுமே என் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வுகளாக அமைந்திருக்கின்றது.

**கேள்வி: கழக மட்டங்களில் மட்டுமன்றி, தேசிய மட்டத்திலும் குறிப்பாக இலங்கை தேசிய அணியிலும் இடம்பிடித்திருந்தீர்கள். அது பற்றிய உங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில்: கழக மட்டங்களில் யாழ்.-நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்காக விளையாடி வருகின்றேன். எமது அணியானது, பல சாதனைகளைப் படைத்திருக்கிறது. அதன் சாதனைகளில் நானும் ஒரு பங்குதாரராக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. தேசிய மட்ட போட்டிகளைப் பொறுத்தவரையில்

வடமாகாணத்திலிருந்து பல வீரர்கள் இலங்கை தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். அதில் நானும் ஒருவர். எமது கழகம் தவிர இலங்கையின் முதல் தர கழகங்களான சொலிட், கொழும்பு ரட்ணம்ஸ் போன்ற கழகங்களுக்காகவும் விளையாடி இருக்கிறேன்.

**கேள்வி: கடந்த 3 வருடங்களாக மாகாணங்களுக்கு இடையிலான தேசிய ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் தொடர்ந்து 3 தடவைகள் வெற்றிவாகை சூடியுள்ளீர்கள். ஒரு வருடம் அணித் தலைவராகவும் அணியை வழிநடத்தியது மட்டுமன்றி, பல விருதுகளையும் தன்வசப்படுத்தியுள்ளீர்கள். அது பற்றிய உங்களது கருத்துக்கள்.**

பதில்: இலங்கையிலே மாகாணங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் ஒவ்வொரு வருடமும் மிகச்சிறப்பாக இடம்பெற்று வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக எமது வடமாகாண அணி சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது. அந்த அணியின் அணித் தலைவராகவும், சக வீரராகவும் விளையாடி உள்ளேன். அதிலும், குறிப்பாகக் கடந்த வருடம் இடம்பெற்ற வடமாகாண அணிகளுக்கு இடையிலான போட்டித்தொடரிலே சிறந்த ஆட்ட நாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகன் விருதுகளைப் பெற்றமை மறக்க முடியாத நாட்கள் எனலாம்.

**கேள்வி: தற்கால சூழலில் தேசிய அணியிலே தமிழ் பேசும் வீரர்களை இணைத்துக் கொள்வதில் பாரபட்சம் காட்டப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், உங்களைப் போன்ற பல தமிழ் பேசும் வீரர்கள் தேசிய அணியில் இடம்பிடித்திருப்பது பாராட்டுதலுக்குரியது. அது பற்றிய உங்களது கருத்துக்கள்?**

பதில்: என்னைப் பொறுத்தமட்டில் பாரபட்சம் என்பதனை தாண்டி தற்காலத்தில் திறமைகளுக்கு முன்னுரிமை வழங்கி வீரர்கள் தேசிய அணிக்குள் உள்ளீர்க்கப் படுகின்றனர் குறிப்பாக தமிழ் பேசும் வீரர்கள் பலர் வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டு தற்போதும் விளையாடி வருகின்றேன். இலங்கை தேசிய அணிக்காக விளையாடுவதனை நாங்கள் பெரிய கௌரவமாகக் கருதுகிறோம்.

**கேள்வி: எவ்வாறான முன்னாயத்தங்களை மேற்கொள்வதன் மூலமாக சிறுபான்மையின மக்களும் தேசிய அணிகளில் இடம்பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும் இது பற்றிய உங்களது கருத்துக்கள்?**

பதில்: சிறுபான்மையினர் மட்டுமன்றி, திறமையுள்ள அனைத்து வீரர்களும் தங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தமது திறமைகளை வெளிப்படுத்தும் பட்சத்தில், நிச்சயம் தேசிய அணிக்காக விளையாடும் வாய்ப்பு கிடைக்கும். விடாமுயற்சியுடன் கூடிய, கடின பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் அவர்களைத் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு உந்து சக்தியாக அமையும்.

**கேள்வி: தேசிய அணிக்காகப் பல நாடுகளில் விளையாடிய உங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில்: இலங்கை தேசிய அணிக்காகப் பல நாடுகளுக்குச் சென்று விளையாடி உள்ளோம். வெளிநாடுகளிலுள்ள காலநிலை எமக்கு பாரிய சவாலாக அமைந்தது. அங்கு நிலவுகின்ற காலநிலை மாற்றங்களால் வீரர்கள் உடல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது. அந்த நாடுகளுக்கு இடையிலான போட்டிகளுக்காக எமது அணி இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பே அந்தந்த நாடுகளுக்குச் செல்லும். அங்கு எமது நாட்டை விட வெளிப் புறச்சூழல் வித்தியாசமாக இருக்கும். இதனால் வீரர்கள் எளிதில் உடல் சோர்வடைவார்கள். அது தவிர, புதிய அனுபவங்களையும் உதைபந்தாட்ட நுட்பங்களையும் அறிந்துகொள்ள இந்த போட்டிகள் வாய்ப்பாக அமைந்திருந்தது.

**கேள்வி: உங்களது சாதனைகள் பலவற்றை நாங்கள் அறிவோம். இருப்பினும், உங்களுக்கு என்றுமே மறக்க முடியாத சாதனைகள் பற்றி?**

பதில்: எமது கழகத்தைப் பொறுத்தமட்டில், பல சாதனைகளைப் படைத்திருக்கிறது. இலங்கையின் பிரிவு-2 போட்டியில் வெற்றி பெற்று பிரிவு-1 போட்டிகளிலே விளையாடி வருகின்ற ஒரே ஒரு வடமாகாண தமிழ் பேசும் தனி ஒரு கழகமாக சென்.மேரிஸ் அணி விளங்குகிறது. இலங்கையின் சாம்பியன் லீக் போட்டிகளிலும் விளையாடி உள்ளது.

உள்ளூர் மட்ட போட்டிகளில் மைலோ கிண்ணத்தை 3 தடவைகள் சுவீகரித்துள்ளது. எமது அணி இந்த போட்டிகளிலே பல தடவைகள் சிறந்த வீரர் மற்றும் சிறந்த தொடர் நாயகன் விருதுகளையும் பெற்றுள்ளேன். இன்றும் எமது அணிக்காக விளையாடி வருகின்றேன்.

**கேள்வி: வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு ஒரு தேசிய அணி வீரராக நீங்கள் கூற விளைவது என்ன?**

பதில்: இன்றைய சூழலில் பல்வேறுபட்ட துறைகளிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகின்றார்கள். அதுமட்டுமன்றி, உலகளவிலும் பல சாதனைகளை புலம்பெயர் தேசங்களிலும் படைத்து வருகின்றார்கள். எமது சமூகத்திற்கு இப்போது தேவையான ஒன்று ஒற்றுமைதான். ஒருவன் முன்னே செல்லும்போது, கூட இருப்பவர்கள், அவனை ஏற்றி விடும் ஏணிப் படிகளாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் எப்போதும் ஒற்றுமை என்பது ஒரு பலமான ஆயுதம். அதை வளர்ந்து வரும் வீரர்கள் சரியாகப் புரிந்து கொண்டால் எமது சமூகம் இன்னும் பல படிகளைக் கடக்க நிச்சயம் வாய்ப்புகள் அதிகம்.



# அச்சுறுத்தலுடன் வாழும் வங்கிஓயா தோட்ட மக்கள்

புஸ்பராஜ்

தேர்தல் காலங்களில் மாத்திரம் வாக்குகளைப் பெறுவதற்காக வீடு வீடாகச் செல்லும் மலையக அரசியல் தலைமைகள், இம்மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுக்கொடுப்பதும் உங்களின் பொறுப்பாகும். மலையகத்தில் இன்னும் கண்களுக்குத் தெரியாமல் ஆயிரம் கணக்கான மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதைக் காண்கிறோம். நுவரெலியா மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு பாராளுமன்ற தேர்தலிலும் 09 உறுப்பினர்களை வாக்களித்துத் தெரிவு செய்து வாக்களித்து தமக்கு ஏதாவது அபிவிருத்தி திட்டங்கள் செய்து கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன் பாராளுமன்றம் அனுப்பினாலும், இறுதியாக இம்மக்களுக்குக் கிடைப்பது வெறும் ஏமாற்றமே இதற்கு விதிவிலக்கல்ல.

நானுஓயா வங்கிஓயா மேற்பிரிவு தோட்ட மக்கள். இங்கு 2015இல் மண் சரிவு அபாயம் காரணமாகத் தோட்டத்தில் உள்ள 24 குடும்பங்களைச் சேர்ந்த 110க்கு மேற்பட்ட மக்களைக் குடியிருப்பில் இருந்து வெளியேறுமாறு தோட்ட நிர்வாகம் மற்றும் அரச அதிகாரிகளால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் 09 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை அவர்களுக்கு மாற்று நடவடிக்கை எதுவும் செய்து கொடுக்காத நிலையில் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட இம்மக்கள் அதே குடியிருப்பில் வாழ்ந்து வருகின்றனர்.

வீடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் கூரை தகடுகள் உடைந்தும் வீடுகளில் பாரிய வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளது.

இதுவரை எந்த ஒரு அரசியல்வாதியும் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அத்தோடு, குடிநீர், மலசலக்கூடம், போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில், இவர்கள் பெரும் சிரமத்தோடு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான புதிய வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை. மேலும் தற்போது தங்கியிருக்கும் வீடுகள் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


பாதிக்கப் பட்ட மக்களின் சிலர் கருத்து தெரிவிக்கையில்.

எஸ்.சித்திரவள்ளி, இவர் கூறுகையில் எனக்கு 68 வயதாகிறது விவரம் தெரிந்த காலம் முதல் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில், தான் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் வாழும் வீடு எட்டடி கம்பிரா, எவ்வித வசதிகளும் கிடையாது. இடம் போதாத காரணத்தினால் தற்காலிக கூடாரத்தினை அமைத்து, அதில் வாழ்ந்து வருகிறோம்.

பிள்ளைகள் அமர்ந்து படிப்பதற்குக் கூட இட வசதியில்லை. மழைக் காலங்களில் வீடுகளில் இருக்கவே முடியாது, காரணம் கூரை தகடுகள் மாற்றப்படவில்லை. தகரம் சல்லடை போல் உள்ளது. காற்றுக்குத் தகரங்கள் பறக்காமல் இதுதான் எங்களுடைய வாழ்க்கை.

200 வருடம் மலையகம்





என கூறுகின்றார்கள். இன்னும் சுத்தமான ஒரு கிளாஸ் தண்ணீரைக் கூட எங்களால் பருக முடியாமல் இருக்கின்றோம்.

சுத்தமான குடிநீர் எங்களுடைய தோட்டத்தில் இருந்தாலும் அதனை முறையாகப் பெற்றுக் கொடுப்பதற்கு எவரும் இதுவரை முன்வரவில்லை. மாதாந்தம் தொழிற்சங்கங்களுக்குச் சந்தா பணம் கட்டினோம். அதற்கு என்ன நடந்தது என்பது கூட உங்களுக்குத் தெரியாது. பிள்ளைகள் அமர்ந்து படிப்பதற்கோ அல்லது அவர்களுடைய பாடசாலை உபகரணங்களைக் கூட வைப்பதற்கு இடமில்லாமல் தவிக்கிறோம். தேர்தல் காலங்களில் மாத்திரம் ஓட்டு கேட்பதற்காக சொகுசான வாகனங்களில் வந்து இறங்குகின்றார்கள். எங்களைப் பற்றிப் பேச விட்டாலும், நாங்கள் எப்படி அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பாகத்தான் கதைக்கின்றார்கள்.



முருகேஸ்

தேர்தலுக்காக அச்சிடப்படும் போஸ்டர்கள் அதற்குச் செலவாகும் கோடிக்கணக்கான பணத்தினை உங்களைப் போன்ற கஷ்டப்படும் மக்களுக்கு இதுவரை காலமாக அப்பணத்தைச் செலவு செய்திருந்தால் ஏன் நாங்கள் 'ரப்பர் சீட்' போட்ட வீடுகளில் பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் வாழ வேண்டும்.



சித்திரவள்ளி

எனவே, எங்களுக்குப் புதிதாக ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் ஜனாதிபதி அனைவரும் எங்களின் அவல நிலையை அறிந்து உடனடியாக வீடுகளை அமைத்து எங்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்தித் தர வேண்டுமென தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

ஆர்.முருகேஸ் கூறியதாவது, நான் தோட்ட தொழிலாளியாகத் தொழில் செய்து இன்று ஓய்வு பெற்றுள்ளேன். நாங்கள் குடியிருக்கும் பகுதி மண் சரிவு அபாயம் இருப்பதாக 2015இல் தோட்ட நிர்வாக இயற்கை அனர்த்த மத்திய நிலைய அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது.

ஆனால், இதுவரை நாங்கள் எங்கே செல்ல வேண்டும் என்பது தொடர்பாக எந்த அதிகாரியும் அறிவிக்கப்படவில்லை.

ஒன்பது வருடங்களாக அதே குடியிருப்பில், எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில், சுவர்கள் இடிந்தும் வடிகான்கள் முறையாக இல்லாமல், கூரைகள் உடைந்து, சிறு சிறு கூடாரங்கள் அமைத்து கொண்டு அதில் வாழ்ந்து வருகின்றோம்.

மாதாந்தம் சந்தா பணம் செலுத்தியும் எந்த புண்ணியமும் இல்லை. தோட்ட அதிகாரியிடம் கேட்டால், அவரும் எந்த பதிலும் சொல்வதில்லை. இந்தா செய்து தருகிறோம் அந்த செய்து தருகிறோம் என கூறிவரும் தோட்ட அதிகாரிகள், எல்லாம் வேறு வேறு தோட்டங்களுக்கு இடமாற்றத்தைப் பெற்றுச் செல்கின்றார்கள்.

எங்களுடைய பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக சிறுவர் நிலையம் கட்டி தந்தார்கள். அதில் எவ்வித வசதிகளும் இல்லை. குடியிருப்பு பகுதியில் உள்ள வடிகான்களை பார்த்தால், மழைக் காலங்களில் நீர் தேங்கி நிற்பதோடு, நுளம்பு தொல்லை துர்நாற்றம் என வீசுகிறது.

தோட்டம் நிர்வாகம் எங்களின் உழைப்பை மாத்திரமே எதிர்பார்க்கின்றார்கள், எவ்வித நலன் சார்ந்த விடயங்களை மேற்கொள்வதில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் வீடு கட்டுவதற்காக வீடுகள் வந்தன, தோட்ட நிர்வாகம் இடம் கொடுக்காமல் இழுத்தடித்தனர், அந்த வீடுகளும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. தற்போது வீடு கட்டுவதற்கான இடத்தில் புதிய தேயிலை கன்றுகளை நாட்டி அந்த இடத்தை இல்லையெனக் கூறிவிட்டனர்.

அடிப்படை வசதிகள் இல்லாமல் நாங்களும் எங்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உள்ளிட்ட முழு பரம்பரையும் இதே போன்று வாழ முடியாது.

ஏனைய சமூகத்துக்கும் எங்களுடைய சமூகத்தைப் பார்க்கின்றபோது, மற்றவர்கள் எங்களைக் கேவலப்படுத்தும் அளவிற்குத் தான் எங்களுடைய அரசியல்வாதிகள் எங்களை வைத்திருக்கின்றார்கள்.

எனவே, எங்களையும் மனிதர்களாக நினைத்து எங்களுக்கு வீடுகளை அமைத்து மண்சரிவு அபாயத்தில் இருந்து எங்களை பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்தமாறு கேட்டுக் கொண்டார்.



சந்திரகலா

இ.சந்திரகலா கூறியதாவது,

நாங்கள் நானுஓயா நகரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் தான் வசித்து வருகிறோம். போக்குவரத்து சேவை எங்களுக்கு கிடையாது.

முச்சக்கர வண்டி மாத்திரமே எங்களுடைய தோட்டத்திற்கு வரும். நகரத்திற்கு சென்று வர வேண்டுமானால் 1,500 ரூபாய் தொடக்கம் 2,000 ரூபா வரை செலவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலை தான் வாழ்ந்து வருகிறோம்.

பிள்ளைகளும் பாடசாலை செல்வதாக இருந்தால் கால்நடையாக நடந்து செல்கின்றனர்.

காலை ஏழு முப்பதுக்கு பாடசாலை சென்றால் மாலை நான்கு மணி ஆகிவிடும் வீடு வந்து சேர்வதற்கு. போக்குவரத்து சேவை இன்மையால் நோயாளர்கள் கர்ப்பிணி தாய்மார்கள் வைத்தியசாலை செல்வதாக இருந்தால் முச்சக்கர வண்டியில் செல்ல வேண்டும் .

இதன் காரணமாக பொருளாதார ரீதியாக பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றோம். என்றும் கூறியுள்ளனர்.

## விசேட வேலைத் திட்டம்






சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்புரைக்கு அமைவாக, கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்தளங்களை மதிப்பீடு செய்யும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினை மதிப்பீடு செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சுகாதார மேம்பாட்டினை மதிப்பீடு செய்யும் பொருட்டு அவர்களின் உடல் திணிவுச் சுட்டி, இரத்த அழுத்த அளவீடு, பல் மருத்துவ சேவை உள்ளிட்ட இரத்தப் பரிசோதனைகளும் இடம்பெற்றது.

– நூருல் ஹுதா உமர்

## தீப கானங்கள்




தீபாவளி திருநாளை முன்னிட்டு, தோட்டப்புற இளைஞர், யுவதிகளின் திறமைகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில், புஸ்ஸலாவை இந்து தேசிய கல்லூரியில் HILL STAR இசைக்குழுவோடு இணைந்து வழங்கிய 'தீப கானங்கள்' பாரம்பரிய நடன இசை நிகழ்ச்சியை மலையக நட்சத்திரக் கலைப் பேரவை நடத்தியது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கண்டி சமூக அபிவிருத்தி நிருவகத்தின் தலைவர் பெ.முத்துலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன் மற்றும் தலைமை வகித்த மாரிமுத்து யோகேஸ்வரன் ஆகியோரும் கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

– மெய்யன்





## 'ஸ்வாஹிமானி' 2024







சமூக சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 'ஸ்வாஹிமானி' 2024 தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வு சுகுறுபாயவில், வியாழக்கிழமை (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தசாசம் சமயம், கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன கலந்துகொண்டார். யாழ்ப்பாண மாவட்டம் மூன்று விருதுகளைப் பெற்று தமிழ் மாவட்டங்களில் அதிக விருதுகளைப் பெற்ற மாவட்டமாகப் பெருமை சேர்த்துள்ளது. நல்லூர் பிரதேச வழிகாட்டல் குழு முதலாம் இடத்தினையும், 50இற்கும் குறைவான மாற்றுத்திறனாளிகளைத் தொழிலில் ஈடுபடுத்திய நிறுவனமாக மாற்று வலுவுடையோர் புனர்வாழ்வு நிறுவனம் (AROD) இரண்டாம் இடத்தினையும், சிறந்த காட்சிப்படுத்தும் மட்டத்திலான படைப்பாளியாகக் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த த.சுரேஸ்குமார் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார்கள்.

இந் நிகழ்வில் அழைப்பாளராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொண்டார்.

– பு.கஜிந்தன்





## சின்னமுத்து தடுப்பூசி வழங்கும் பிரதான நிகழ்வு




சின்னமுத்து நோயிலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு சுகாதார அமைச்சு நாடளாவிய ரீதியில் விசேட தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டமொன்றினை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 31 தடுப்பூசி வழங்கும் மையங்களில் சின்னமுத்து தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. குறித்த தடுப்பூசியை வழங்கும் பிரதான நிகழ்வு சனிக்கிழமை (9) அன்று அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் இடம்பெற்றது. கல்விக் கல்லூரின் உப பீடாதிபதி எம்.சீ.ஜுனைடீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

– நூருல் ஹுதா உமர்




## புதிய திறன் வகுப்பறை



ஸ்கந்தா ஆரம்ப பாடசாலையில் புதிய திறன் வகுப்பறை திறப்பும் மாணவர்களின் கண்காட்சியும் வெள்ளிக்கிழமை (08) சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் சிவசுப்பிரமணியம் நேதாஜி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திறன் வகுப்பறையினை ஸ்கந்தா நிதியத்தின் உப பொருளாளரான சுலோசனா தாமோதரம்பிள்ளை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்கந்தா நிதிய தலைவர் வைத்திய கலாநிதி கனகரட்ணம் சிவகுமார், ஸ்கந்தா நிதிய இணை நிறுவனர் கந்தையா மகேந்திரலிங்கம் உள்ளிட்ட ஸ்கந்தா நிதிய உறுப்பினர்களும், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புதிதாக அமையப்பெற்ற கட்டிடத்தில் ஒரு வகுப்பறை திறன் வகுப்பறையாக மாற்றப்பட்டுக் குறித்த வகுப்பறையில் திறன் பலகையினை நிறுவுவதற்கான நிதியை ஸ்கந்தா நிதியம் வழங்கி இருந்தது.

– பு.கஜிந்தன்





## 'வித்தகர்' விருது



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள கிழக்கு மாகாண இலக்கிய விழாவில், ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான யூ.எல்.ஆதம்பாவா 'வித்தகர்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சிறுவயது முதல் தற்போது வரை நாட்டார் பாடல்களைப் பாடியும் எழுதியும் வருகின்ற அதேவேளை, அவற்றை நூல்வடிலும் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவ்வாறு தொகுத்து எழுதிய நூல்களான 'கிராமத்து மண்வாசம்', 'தென்கிழக்கின் பாரம்பரியம்' என்ற நாட்டார் பாடல்கள் அடங்கிய நூல்கள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டு, அந்நூல்களுக்காக 'வித்தகர்' விருது கிடைக்கவுள்ளது.

பிரதேச, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

இவர், அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதூரைச் சேர்ந்த மர்ஹூம்களான அஹமட் லெப்பை உதுமாலெப்பை, உதுமாலெப்பை றஹ்மத்துல்லா தம்பதிகளின் 3ஆவது மகன் என்பதுடன், தற்போது சாய்ந்தமருந்து பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள சாய்ந்தமருது 09, ஜீ.எம்.எம்.எஸ். வீதியில் வசித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

– எம்.எஸ்.எம்.ஸாகிர்

அமெரிக்கா

உக்ரைன் – ரஷ்யா போரை நிறுத்த

# ட்ரம்ப் முயற்சி?



அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஆகியோர், நவம்பர் 7ஆம் திகதியன்று தொலைபேசி வாயிலாக கலந்துரையாடியுள்ளதாக, ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வர பல்வேறு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், தனது தேர்தல் பிரசாரத்தின் போது, “தான் வெற்றி பெற்றால் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்றார்.

தற்போது ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ள நிலையில், அவர் போரை நிறுத்த முயற்சிகள் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

தொலைபேசி வாயிலாக நடைபெற்ற இந்த உரையாடலின் போது, “உக்ரைன் உடனான போரைத் தீவிரப்படுத்த வேண்டாம். போரைக் கைவிட வேண்டும்” என புட்டினை வலியுறுத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

“ட்ரம்புக்கும், புட்டினுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து தங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை. இதனை ஏற்கெவோ அல்லது எதிர்க்கவோ முடியாது” என உக்ரைனின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கியூபா

கியூபாவில்

## அடுத்தடுத்து நிலநடுக்கம்



கியூபாவில், ஞாயிற்றுக்கிழமை (10), அடுத்தடுத்து இரண்டு முறை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தீவு நாடான கியூபாவில் பர்டோலேமே மாசோ பகுதியில் முதலில் 5.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து, அடுத்த ஒரு மணிநேரத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 6.8 ரிக்டர் அளவில் பதிவானது.

இந்த நிலநடுக்கம் கியூபாவின் மிகப்பெரிய நகரான சான்டியாகோடி கியூபாவில் உணரப்பட்டுள்ளது. மேலும் ஹோல்யின், குவான்ட்னாமோ போன்ற நகரங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

மேலும், அருகில் உள்ள ஜமைக்கா தீவிலும் நிலநடுக்கத்தால் அதிர்வு ஏற்பட்டதாகத் தெரிவித்தனர். பிலோன் என்ற சிறிய கிராமத்தில் உள்ள வீடுகள் பாதிக்கப்பட்டதாக, சமூக வலைத்தளங்களில் வீடியோ மற்றும் படங்கள் வெளியாகியுள்ளன.

அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால், மக்கள் பீதி அடைந்தனர்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

குஜராத்

திடீரென தீப்பற்றிய கன்டெய்னர்

## 8 கார்கள் தீக்கிரை



குஜராத்தில், கொள்கலன் லொறியில் ஏற்பட்ட தீ விபத்தில், அதில் கொண்டு செல்லப்பட்ட 8 கார்களும் எரிந்து சேதமடைந்தன.

குஜராத்தில் இருந்து ஐதராபாத் நகர் நோக்கி கார்களை ஏற்றிசல சென்ற குறித்த கொள்கலன் லொறி, ஜகீராபாத் பகுதியில் வைத்து, திடீரென தீப்பிடித்து எரிந்தது.

இதன்போது, அந்த லொறியில் இருந்த 8 கார்களும் எரிந்து நாசமடைந்தன. அவற்றின் மதிப்பு பல இலட்சம் இருக்கும் என கூறப்படுகிறது.

லொறியில் உள்ள வயர்களில் ஏற்பட்ட மின் கசிவால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் என்று, அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

அயோத்தி

குழந்தை இராமரை

## கதகதப்பாக வைக்க முடிவு



அயோத்தியில் உள்ள குழந்தை இராமருக்கு, சீதோஷ்ண (குளிர்காலம்) நிலைக்கு ஏற்ப உடைகளை அணிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டுக் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் திறக்கப்பட்டது. இக்கோயிலில் குழந்தை வடிவமாக இராமர் (ராம் லல்லா) காட்சியளிக்கிறார்.

அவருக்கு சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உடைகளை அணிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.


இதன்படி, குளிர்காலம் 20ஆம் திகதி தொடங்குகிறது. இந்த மாதம் முதல் குழந்தை இராமரைக் கதகதப்பாக வைக்கும் வகையில் க்வில்ட்ஸ், பஷ்மினா சால்வைகள் மற்றும் இதர டிசைனர் உடைகளை அணிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குழந்தை இராமருக்கு நைவேத்யமாக உலர் பழங்கள் படைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல்

தாக்குதலுக்கு உத்தரவிட்டதை

## ஒப்புக்கொண்டார் நெதன்யாகு



லெபனானில் கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட பேஜர், வாக்கி - டோக்கி தாக்குதலில், இஸ்ரேலுக்கு தொடர்பு இருப்பதை அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை(10) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனை நெதன்யாகுவின் செய்தித் தொடர்பாளர் ஓமர் டோஸ்ட்ரி உறுதி செய்துள்ளார்.

லெபனான் மற்றும் சிரியா முழுவதும்லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்திய ஆயிரக்கணக்கான பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. அடுத்த நாளே அவர்கள் பயன்படுத்திய வோக்கி-டோக்கிகள் வெடித்துச் சிதறியுள்ளன.

இந்த ‘டிவைஸ் வெடிப்புத் தாக்குதல்’ சம்பவங்களில் 40 பேர் உயிரிழந்தனர். ஏறத்தாழ 3,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சதிச் செயலில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் சதி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இஸ்ரேல் அரசு, இஸ்ரேல் இராணுவம், இஸ்ரேல் மொசாட் உளவுத் துறை சார்பிலிருந்து எந்தவித விளக்கமும் வழங்கப்படாமல் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது நடத்தப்பட்ட பேஜர் மற்றும் வோக்கி-டோக்கிகள் தாக்குதல்களின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

கேரளா

கேரளாவில்

## கடல் விமான சுற்றுலா சேவை ஆரம்பம்




கேரள மாநிலத்தில் கடல் விமான சுற்றுலா சேவை தொடங்கப்படவுள்ளது.

இந்த கடல் விமான சுற்றுலா, கொச்சியில் இருந்து மூணாறுக்கு இடையே தொடங்கப்படவுள்ளது. இதற்கான சோதனை ஓட்டம் திங்கட்கிழமை (11) நடைபெற்றது.

இந்த கடல் விமானச் சேவை சுற்றுலாவுக்கு மட்டுமின்றி அவசர காலங்களிலும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை வென்றது நியூசிலாந்து



இலங்கைக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியை நியூசிலாந்து வென்றது.


இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், தம்புள்ளயில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, நுவான் துஷார (2), வனிது ஹசரங்க (4), மதீஷ பத்திரண (3), மகேஷ் தீக்ஷனவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் வில் யங்க் 30 (32), ஜொஷ் கிளார்க்சன் 24 (25), அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர் 19 (24) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை சார்பாக பதும் நிஸங்க 52 (51) ஓட்டங்களைப் பெற்றபோதும் சான்ட்னெர், லொக்கி பெர்கியூசன் (3), மிஷெல் பிறேஸ்வெல் (2), ஸகாரி போக்கிஸ், கிளென் பிலிப்ஸிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களையே பெற்று ஐந்து ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பெர்கியூசனும், 1-1 என சமநிலையான இத்தொடரின் நாயகனாக ஹசரங்கவும் தெரிவாகினர்.

## றியல் சொஸைட்டிடம் தோற்ற பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், றியல் சொஸைடட்டின் மைதானத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

சொஸைடட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஷெரல்டோ பெக்கர் பெற்றிருந்தார்.

இப்போட்டியில் பார்சிலோனாவின் லமீன் யமாலுக்கு ஓய்வளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவை வென்றது தென்னாபிரிக்கா



இந்தியாவுக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.


நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா வென்ற நிலையில், கெஹெபாவில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, மார்கோ ஜன்சன், ஜெரால்ட் கொயட்ஸி, அன்டிலி சிமிலோனி, மார்க்ரம், இங்காபிலூமி பீற்றரிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து கேஷவ் மஹராஜ்ஜின் கட்டுக்கோப்பான பந்துவீச்சில் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து, 124 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஹர்திக் பாண்டியா ஆட்டமிழக்காமல் 39 (45), அக்ஸர் பட்டேல் 27 (21), திலக் வர்மா 20 (20) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, வருண் சக்கரவர்த்தி (5), ரவி பிஷ்னோயிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸின் ஆட்டமிழக்காத 47 (41), கொயட்ஸியின் ஆட்டமிழக்காத 19 (09) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஸ்டப்ஸ் தெரிவானார்.

## லெய்செஸ்டரை வீழ்த்திய யுனைட்டெட்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற ஆர்சனலுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது. ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கப்ரியல் மார்டினெல்லி பெற்றதோடு, செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை பெட்ரோ நெட்டோ பெற்றிருந்தார்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக புரூனோ பெர்ணாண்டஸ், அலெஜான்ட்ரோ கர்னாச்சோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஒவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற இப்ஸ்விச் டௌணுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

## மே. தீவுகளை தோற்கடித்தது இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், பார்படோஸில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

மே. தீவுகள்: 158/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றொவ்மன் பவல் 43 (41), றொமாரியோ ஷெப்பர்ட் 22 (12), மத்தியூ போர்ட் ஆ.இ 13 (06), றொஸ்டன் சேஸ் 13 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: சஹிப் மஹ்மூட் 2/20 [3], டான் மௌஸ்லி 2/29 [4], லியம் லிவிங்ஸ்டோன் 2/16 [2], ஜொஃப்ரா ஆர்ச்சர் 1/31 [4], அடில் ரஷீட் 1/32 [4], சாம் கர்ரன் 0/20 [3])

இங்கிலாந்து: 161/3 (14.5 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் 83 (45), வில் ஜக்ஸ் 38 (29), லியம் லிவிங்ஸ்டோன் ஆ.இ 23 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 1/24 [4], குடகேஷ் மோட்டி 0/16 [2])

போட்டியின் நாயகன்: ஜொஸ் பட்லர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 12, நவம்பர் 2024, இல. 08, ஹூணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.